ஸ்ரீ லங்கா தபாலில் அஞ்சலகத்தில் பதிவுசெய்யப்பெற்றது

# தர்க்கீகம் 3

தை 1981 ✱ மாத இதழ் ✱ விலை ரூபா 1-00

> இன்றைய சமூகத்தில் முதலாளி வர்க்கத்தோடு முட்டி மோதிக் கொண்டிருக்கும் எல்லா வர்க்கங்களிலும் பாட்டாளி வர்க்கமே உண்மையில் புரட்சிகரமானதால், இவ்வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக்கைப்பற்றுவது வரலாற்றுப் போக்கில் தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாகும்.
>
> —மார்க்ஸ்

# தளம் போகுமா? களம் காணுமா?

அரசாங்கத்தின் முடிக்குரிய காணிகளில் அத்துமீறிப் பிரவேசித்து வாழ்பவர்கள், அக்காணிகளை விட்டு வெளியேற வேண்டும் என்று காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். அதாவது அரசு 58ம், 77ம் ஆண்டு கலவர காலங்களிலும் வேறு சூழ்நிலைகளிலும் வடக்கு, கிழக்கு நோக்கி வந்து குடியேறிய அம்மக்களை அவர்களது காணிகளிலிருந்து விரட்ட முற்படுகின்றது, என்பது தெளிவாகின்றது. இவ்வாறு குடிபெயர்ந்து வாழுகின்ற மக்கள் யார்? அவர்களது சமூகப் பின்னணி என்ன? ஏன் அவர்களை அப்புறப்படுத்த அரசு தயாராகின்றது. என்ற கேள்விகளுக்குப் பதில் காண முற்படின் பச்சை முதலாளித்துவ அரசின் இனவாதப் போக்கையும், அதன் பிரதிபலிப்புக்களையும் பார்க்க முடியும். வாக்குரிமைகளை, வாழும் உரிமைகளை 48இல் பறித்தெடுத்தது ஆனைக் கட்சி அரசாங்கம். தொடர்ந்து வந்த சிங்கள சோவனிசத்தின் விஸ்தரிப்புக் கொள்கைகளால் பாதிக்கப்பட்ட ஈழத்து மக்கள் இனியும் தத்தமது தளங்களை (இடங்களை) விட்டு, மூட்டை முடிச்சுக்களுடன் புறப்படுவார்களா? அல்லது அங்கேயே களம் அமைத்துப் போராட்டம் நடத்துவார்களா?

அத்துமீறிய குடியேற்றக்காரர்கள் என்று அரசினரால் வர்ணிக்கப்படும் இவர்கள் யார்? கடந்த நூற்றுண்டிலும் அதற்கு முன்பும் இந்நாட்டை ஆண்ட பிரிட்டிஷாரால் ஆசை வார்த்தை கூறி அழைத்து வரப்பட்டவர்கள்- மலைக்காடுகளை அழித்துப் பாதைகளை அமைத்துப் புதுப்புது நகரங்களை நிர்மாணித்த சிற்பிகள்-அட்டைக் கடியிலும் நுளம்பின் தொல்லையிலும் கடும் குளிரில் நின்று தேயிலைச் செடிகளை வளர்த்து அதன் மூலம் தேசிய வருமானத்தை ஈட்டித்தந்த உழைப்பாளிகள். இவர்கள் தான் மலையகத் தமிழ் பேசும் தொழிலாளர்கள். 1948இலே வாக்குரிமையையும், வாழும் உரிமையையும் பறிகொடுத்து நாடற்றவர்கள் என்று கௌரவப் பட்டம்பெற்ற இம்மக்கள் இந்நாட்டு வாணிபத்தில் ஏற்றுமதிச் சரக்குகள் போல ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு அழைத்து வரப்பட்ட காரணத்தால் இந்திய வம்சாவளியினர் என்று அழைக்கப்பட்டு, பெருந்தோட்டங்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ்பேசும் மக்களிலும் பார்க்க வேறுபட்ட வரலாற்றைக் கொண்ட இவர்கள் பதட்ட நிலைகளிலே பாதுகாப்பிற்காக இலங்கையின் வட,கிழக்கையே நாடி வருவது கண்கூடு.

1948இலே வாக்குரிமை வாழும் உரிமை ஆகியன பறிக்கப்பட்ட போதிலும் இந்தியா திரும்புவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனாலோ என்னவோ 58ன் பதட்ட நிலைகளிலே தோட்டத்துலயன்களை விட்டுப் புறப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டபோது இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதிகளுக்கு விரைந்தனர். இம்மக்களின் ஒரு பகுதியினர்; நகர்ப்புறங்களை அண்டி நகர்ப்புறத் தொழிலாளர்களாகத் தம்மை மாற்றிக் கொண்டனர். ஏனையோர் தொடர்ந்தும் தமது லயன்களிலேயே வாழ்ந்தனர். இவ்வாறு இவர்கள் தோட்டங்களிலே தங்கிக்கொண்டதற்கு அன்றைய காலகட்டத்தில் சிங்களத் தொழிலாளர்கள் தோட்டங்களில் வேலை செய்யாதிருந்தமையும் ஒரு காரணமாக அமையலாம். அதாவது தோட்டங்களுக்கு உள்ளே இம்மக்களது பலம் அதிகமானதாக இருந்ததுடன், அத்தோட்டத்து மண்ணே தமது சொந்த மண் என்ற இறுமாப்பும் அவர்களுக்கு இருந்திருக்கிறது. இதனாலே தான் சில மலையகப்பட்டினங்களில் வாழ்ந்த தொழிலாளர்கள் கூட கலவரகாலத்தில் தோட்டங்களில் பாதுகாப்புத் தேடிக் கொள்ள முடிந்திருக்கின்றது. இருந்தும் 58இன், கலவரத்தையடுத்து வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள காடுகள் சிலவற்றையழித்துக் குடியேறியவர்களின் தாக்கத்தால் படிப்படியாக மலையக மக்கள் இவ்விதம் குடியேறுதல் இடம் பெற்றிருக்கிறது.

கடந்த ஆட்சிக் காலத்தில் சிறிமாவோ அரசு கடைப்பிடித்த தேசிய மயமாக்கல் கொள்கையின் (73ல் இடம் பெற்ற) எதிரொலியாக பல ஆயிரக்கணக்கான மலையக மக்கள் நடுவீதிக்கு விரட்டப்பட்டனர். பெருந் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டு, அங்கு தொழில் புரிந்த தமிழ் மக்களுக்கு பதிலாக சிங்களத் தொழிலாளர்கள் அவ்விடத்தை நிரப்பிக் கொள்ளலாயினர்.

தோட்டங்களில் இருந்து நடுவீதிக்கு விரட்டப்பட்ட மக்களிற் பலர் 73-77 ஆண்டுக்

(8ம் பக்கம் பார்க்க)

## மதுரையில் தமிழ் மாநாடு

# மொழியியலில் மாற்றம் ஏற்படுத்துமா?

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோரும், தமிழைப் பயின்றோரும், மொழியில் வல்லுனர்களும் கூடி தமிழின் தொன்மை, வளர்ச்சி, பற்றி ஆய்வு செய்து தம்முடிவுகளை கூறும் அடிப்படையிலும், நவீன உலகின் விஞ்ஞான வளர்ச்சியில் தமிழின் நிலைப்பாடு குறித்து தம் ஆய்வுகளை வெளிப்படுத்திடவும் வேண்டி அனைத்துலகத் தமிழாராச்சி மன்றம் 1964ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. வணபிதா தனிநாயகமடிகள், மல்கம் ஆதிசேசையா, போன்ற மொழியியல் வல்லுனர்களின் அயராத உழைப்பில் இம் மன்றம் நிறுவப்பட்டது. இது வரை நான்கு மாநாடுகளை நடாத்தியுள்ள இம்மன்றம் 1981ம் ஆண்டு தைத்திங்கள் 4ம் நாள் தொடக்கம் 10ம் நாள்வரை தனது ஐந்தாவது மாநாட்டினை தமிழக அரசின் ஆதரவுடன் நடாத்துகின்றது. ஆய்வு செய்திடக் கூடுகின்றது;

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் பரந்த மனித குலத்தின் உறவினை உலகளாவிய விரிந்த மனப்பான்மையை ஒன்றே உலகம் என்னும் கோட்பாட்டை, உரத்து ஒலிக்கும், சங்கப் புலவன் பூங்குன்றனின் கவிதை வரிகளை இம் மன்றம் தன் இலச்சனைப் பொன் மொழியாக பொறித்துள்ளது.

வரலாற்று பெருமை மிக்கதும், ''கள்வனோ! என்கணவன்'' என காற்சிலம்பு காட்டி நீதி கேட்டு ''மன்னனே யாயினும் குற்றமிழைத்தவனே'' என்ற வீரப் பெண் கண்ணகியின் காவியம் பாடும், ''சிலப்பதிகார'' பெருமை மிக்கதும், சங்கம் அமைத்து தமிழாய்ந்த புலவர்களைக் கொண்டதும், மாடுகட்டி போரடித்தால் மாளாது என்றுசொல்லி யானை கட்டி போரடித்த மதுரை மாநகரில் ஐந்தாவதுதமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுவது பொருத்தமானதே.

''ஞாயும் யாயும் யாராகியரோ, எந்தையும் நுந்தையும் யாராரோ ... ...

(2ம் பக்கம் பார்க்க)

### வாழ்த்துக்கள்

உழைப்புக்கு மதிப்பளிக்கும் ஈழவரின் உழைப்பின் விழாவான ''உழவர் விழா'' விற்கு தர்க்கீகம் தன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

''உழவர் நாள்'' சிறப்பு மலர் உள்ளே →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால், சக்தியாய் உருவெடுக்கும்.

# "லங்கா ராணி"

''லங்காராணி'' நாவலின் திறனாய்வு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. அண்மையில் பல்கலைக் கழக இராமநாதன் மண்டபத்தில் நடாத்தப்பட்ட. மேற்படி திறனாய்வில்பேராசிரியர் க. கைலாசபதி, திருமதி மனோன்மணி சண்முகதாஸ், விரிவுரையாளர் மு. நித்தியானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். மாணவர் அவைத் தலைவர் ம. செல்வின் நாவலினை அறிமுகம் செய்துவைத்தார். பேராசிரியர் கைலாசபதி தமது திறனாய்வில் ''சமகாலத்தின் எழுத்து வடிவம்'' என குறிப்பிட்டார். விரிவுரையாளர் நித்தியானந்தன் தமதுஆய்வில் 'இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையை இங்குள்ள இடதுசாரிகள் தம் இலக்கியத்தில் தளமாக்கவில்லை என்ற குற்றச் சாட்டை ஒரு 'மார்க்சிஸ்டே' இந்நாவல் மூலம் உடைத்தெறிந்துள்ளார் என்பது குறிப்பிடல் தக்கது'' எனக் கூறினர் அ. வரதராஜன் நன்றியுரை தெரிவித்தார்.

''உத்தியோக மோகம், பண ஆசை, வெளிநாட்டு மோகம், இவற்றால் ஒருசிலர் வேரறுந்துபோய்க் கிடப்பதாக இருந்தாலும், அவன் கண்மூடிக் கிடக்கின்றான், என நினைத்து அவனை அழித்துவிடலாம் என்று நினைப்பவர்கள் பகல் கனவு காண்கிறார்கள்;

அந்த மலைக் குன்றுகள், கடல் ஏரிகள், பனங்கூடல்கள் வயல் வெளிகளில் ஒன்றிப் போய்க் கிடப்பவர்களை அவர்கள் மறந்துபோய்விடுகின்றார்கள்.

சாய்ந்துபோய்க் கிடக்கும் நெல் வயல்களில் அறுவடை செய்யப் போய்க்கொண்டிருப்பான், அவனுடைய கைகளிலே கூரான பற்கள் கொண்ட அரிவாள் இருக்கும், இனிய கள் நிரம்பி வடியும் பனைகளைத் தேடிப் போய்க்கொண்டிருப்பான், அவனுடைய கைகளில் கூரான பாளை சீவும் கத்தி இருக்கும், பாரிய மீன்களைத் தேடிகடலில் போய்க்கொண்டிருப்பான் அவனுடைய கைகளில் கூரான ஈட்டி போன்ற மண்டா இருக்கும். மலைத் தோட்டங்களுக்குப் போய்க் கொண்டிருப்பான், அவனுடைய கைகளில் செடிகளை மட்டமாகச் சீவித்தள்ளும் கூரான கவ்வாத்துக் கத்தி இருக்கும். இவர்கள் இருப்பதால்தான் தமிழ் மண் இருக்கின்றது. இவர்களுடைய இதயத்தில் இருந்துதான் தமிழ் ஊற்றெடுத்து வருகின்றது, சட்டம் போட்டு தமிழை அழிக்கலாம், தமிழனை அழிக்கலாம் தமிழ் மண்ணை அபகரிக்கலாம் என்று நினைப்பவர்கள் இவர்கள் இருப்பதை மறந்து போய்விடுகிறார்கள். இவர்களுடைய கைகளில் என்ன இருக்கிறது என்பதை மறந்து போய்விடுகிறார்கள். விளைவு எண்ணிப்பார்க்க மறுக்கின்றார்கள்''

— அருளரின்
''லங்கா ராணி''
நாவலில் இருந்து

# மதுரையில் தமிழ் மாநாடு ........

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செம்புலப் பெயர் நீர் போல் அன்புடை நெஞ்சம் தம்முள் கலந்தனவே''— உன்பாட்டனும், என் பாட்டனும், யாரோ, என் தந்தையும், உன் தந்தையும் யாரோ ஆயினும் செம்மண் நிலத்தில் கலந்த நீர் போல அன்பு கொண்ட நமது உள்ளம் ஒன்றோடொன்று கலந்துவிட்டது எனும் காதல் வாழ்வினையும். புல்லாகி, பூண்டாகி, புழுவாய் மரமாகி, என்னும் மனித தோற்றத்தின் பரிணாமக் கொள்கையினையும், 'பகுத்துண்டுபல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுளெல்லாம் தலை' என்னும் வாழ்வியல் கோட்பாட்டையும், ''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்'' என்னும் தனது சமூக கண்ணோட்டத்தையும், ''சாதி இரண்டொழிய வேறில்லை'' என்னும் சமூக அமைப்பினையும், உள்ளடக்கிய தமிழின் சிறப்புக்களை ஆய்வு செய்யும் இம் மாநாடு இன்றைய உலகவளர்ச்சியில் தமிழ் பேசுவோர் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளையும், மாற்றங்களையும், தன் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

1974ல் நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு ஈழத்தில் நடைபெற்றபோது - மக்கள் எழுச்சியினை - கலாச்சார விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தியது என்பதனை மறுக்க முடியாது. ஆனாலும் இம் மாநாடு ஈழவர்களின் வாழ்வில் மறக்கமுடியாத - துயரத்தினையும் அத்துயர வடுக்களின் வெளிப்பாடாக ஈழத்து இளைஞர்களின் போராட்ட உணர்வில் உந்துவிசையை ஏற்படுத்தியது என்பதனையும்- ஐந்தாவது மாநாடு நடைபெறப்போகும் இவ் வேளையில் - ஈழவர்களும் - ஈழவரல்லாத தமிழ் பேசுவோரும் தமிழைப் பயின்றோரும் சிந்தனையில் கொள்ள வேண்டிய தொன்றாகும். ஆதலினால் நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின் போது ஈழத்தில் பலி கொள்ளப்பட்ட பதினொருவரின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துவதனை, அதனுடன் கூடிய ஈழவர்கள் போராட்டத்தின் இன்றைய நிலையினைப்பற்றி நினைவுறுத்தும் வகையில், தன் நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் சேர்த்துக் கொள்ளுமா என்பதனை, ஈழவர்களும் அவர்கள் தம் இயக்கங்களும் எதிர்பார்க்கின்றனர்.

அதே வேளையில் இன்று மொழியியலில் மாற்றம் காணும் வகையில், எழுத்துச் சீர்திருத்தத்தினை கடைப்பிடிக்கும் வண்ணம் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசும் அதனை நடைமுறைப் படுத்துகின்றது. 1936ம் ஆண்டு தொடக்கம், பெரியார் ஈ. வெ. ராவாலும் திராவிடர் கழகத்தாலும் வற்புறுத்தப்பட்டு அவர்களால் நடைமுறைப் படுத்தப்பட்டுவந்த எழுத்துச் சீர்திருத்தம், - அதாவது முதல் கட்டமாக ''ஐ'' ''லை'', ''ளை,,, ''னோ'' போன்ற எழுத்துக்களை 'அய், ''லை'', ''ளை'', ''னோ'' என எழுததுல் - தமிழ்நாட்டு கல்வியாளர்களாலும் அதன் அவசியம் உணரப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுகின்றது. பெரியார் ஈ. வெ. ராவின் நூற்றாண்டினைவாக தமிழ் நாடு அரசும் ஆணையாக வெளியிட்டு விட்டது: ஆனால் ஈழத்திலும் தமிழ் நாட்டுக்கு அப்பால் கடல் கடந்த நாடுகளிலும் வாழும் தமிழ் பேசுவோரின், தாய் மொழியாக கொண்டோரின் எண்ணங்கள், கருத்துக்கள் இம் முடிவில் இணைக்கப்படவில்லை. இவ் விடங்களில் நடைமுறைப்படுத்துவது பற்றியோ, நடைமுறைப்படுத்தாது விடுவதால் ஏற்படும் மொழியியல் சிக்கலைப்பற்றியோ, எவ்வித ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. இந் நிலையில் தமிழ் நாட்டில் கூடும் ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாடு அனைத்துலக தமிழ் பேசும் பிரதிநிதிகளையும், கலவியாளர்களையும் மொழியியல்வல்லுனர்களையும் உள்ளடக்கியுள்ளதால் இப்பிரச்சனை குறித்து தீர்வுவழங்குமா? தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுமா? என்பதனையும் ஈழவர் தமது கருத்தாக கொண்டுள்ளனர்.

அடுத்து அறிவியல் வாழ்வின் பல துறைகளிலும்- முனைப்புடன் வளர்ந்து செல்கின்றது. புதிய கண்டுபிடிப்புகள் பலகிப் பெருகிய வண்ணம் உள்ளது. உலகம் வேகமாக முன்னேறிச் செல்கின்றது. இந் நிலையில் அறிவியலுடன் எமது மொழியும் இணைய வேண்டுமானல் நமது மக்களும் புரிந்து கொள்ள வேண்டுமானல்- அவற்றை எடுத்துக் கூற- எழுத- சொற்கள நமக்கு தேவையாகியுள்ளது, ஆனால் நமது மொழியில் அதற்கு வாய்ப்புண்டா என்றால் ''இல்லை'' என்றேதான் கூற வேண்டும். ஆதலால்- தமிழ் பற்றி ஆய்வு செய்ய முனைந்துள்ள இம் மாநாடு அறிவியல் துறைகளுக்கேற்ப புதிய கலைச்சொற்களை, பதங்களை, தமிழ்பேசும் மக்களுக்கு வழங்குமா? அதனைத் தன் பணியாகக் கொள்ளுமா? என்னும் கேள்விகளை நாம் அவசியம் கேட்க வேண்டியுள்ளது

இவ் ஆய்வுகளுடன், மாநாடு சிறப்புற ''தர்க்கீகம்'' தன் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது.

# வரலாற்றில் ஒரு பாய்ச்சல்

ஆனைக்கோட்டையில் அண்மையில் நடந்து முடிந்துள்ள முதல் கட்ட அகழ்வாராய்ச்சி ஈழவர்களின் - குறிப்பாக யாழ் குடநாட்டின், வரலாற்றை ஒரு தடவை திரும்பிபார்க்க வைத்துள்ளது. யாழ்ப்பாண பல்கலைக் கழக வரலாற்று துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படும் புதை பொருள்கள் பல உண்மைகளை அரங்கிற்கு கொண்டுவந்துள்ளது.

இந்தியாவின் வரலாறு வேதங்களிலும்,- ஆகமங்களிலும்தான் உண்டு. அதற்கு மேல் ஆய்வு செய்ய எந்த ஒரு தடயங்களும், ஆதாரங்களும் இல்லையென்ற வரலாற்றாளர்களின் நம்பிக்கையை அதன்படி அவர்கள் கொண்டிருந்த இந்தியவரலாறு பற்றிய முடிவுகளை - 1920ல் சிந்துவெளிப் பள்ளத்தாக்கு மாற்றி அமைத்தது. மார்க்ஸ் முல்லர் என்பவரால் புதையுண்டுபோன, இரண்டு நகரங்களின் தடயங்கள், சின்னங்கள், மொஹெஞ்சதாரோவிலும், கரப்பாவிலும் கண்டுபிடிக்கப்பட்ட போது இந்திய வரலாறு ஒரே பாச்சலில் கி-மு 3000-5000 வரை பின்நோக்கி இழுத்துச் செல்லப்பட்டது.

அதே போன்று இலங்கையின் வரலாறும், மகாவம்சத்திலும் இராஜ வளியாவிலும்தான் உண்டு. விஜயனின் வருகையுடன் தான் இங்கு வரலாறே ஆரம்பம் என்ற முடிவுகளை, நம்பிக்கைகளை அண்மைக்கால ஆய்வுகள் உடைத்துக் கொண்டிருக்கும் வேளையில்தான் ஆனைக்கோட்டை முக்கியத்துவத்தை பெறுகின்றது. ஈழவர்களின் வரலாற்றுக்கு சான்றுகள் இல்லை. யாழ்ப்பாண ராச்சியத்தின் தோற்றம் 13ம் நூற்றாண்டின் போதுதான், பல்லவர் காலத்தில்தான், என்ற வரலாற்றாசிரியர்களின் கூற்றும் பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

''பெருங்கற்பண்பாட்டு'' காலத்தை சேர்ந்தவையென மெய்ப்பிக்கும் பல சான்றுகள், தடயங்கள் இங்கு கிடைத்துள்ளன. ''பிராமி'' எழுத்து பொறிக்கப்பட்ட முத்திரை, பெண்ணுருவம் பதித்த நாணயம், கரும் செம்மட்பாண்ட துண்டுகள், எலும்புக்கூடு, எலும்பிலான ஆயுதங்கள், இன்னும்பல கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

பரணவிதான, G. C. மெண்டிஸ் போன்ற வரலாற்று ஆய்வாளர்களின் முடிவுகளும், மறுபரிசீலனை செய்யப்பட வேண்டுமென்ற அவசியத்தினை ஆனைக்கோட்டை வலியுறுத்துகின்றது. புத்தளத்தில் ''பொம்வரிப்பு'' என்னும் இடத்தில் அகழ்வாராய்ச்சியின்போது ''பெருங்கற்பண்பாட்டு'' காலத்தைக் கூறும் ''தாழிகள்'' கண்டு பிடிக்கப்பட்டபோது பரணவிதான போன்றவர்கள் ''வழிந்து வந்த கலாச்சார எச்சம்'' என முடிவு கூறினர் அதாவது இலங்கையில் பெருங்கற்பண்பாட்டு கால வரலாறு கிடையாது-ஆரியரின் வருகையுடனேயே இலங்கை வரலாறு உண்டு என வாதிட்டனர். ஏனெனில் சிங்கள பெருந் தேசிய வாதத்தினை வலியுறுத்தி, நிலை நிறுத்த முனைந்தனர். ஆனால் புதையுண்டுகிடக்கும் சான்றுகள் வெளிவர அவர்களது வாதங்களும் புதைகின்றன.

ஆனைக்கோட்டை அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட சான்றுகளில்- எந்தவித பௌத்த-சமண-பிராமணிய சாயங்களும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் மூத்த குடியினர்- எவர் என்ற கேள்வி நீண்ட காலமாகவே எழுப்பப் பட்டு வந்தது. இயக்கர்-நாகர்-என ஒரே சொல்லில் இலகுவில் பதிலிறுத்தனர் இது வரை கால வரலாற்றாசிரியர்கள். இவ் வேளையில் தான் ஆனைக்கோட்டை மண்மேடுகள் ஈழவரின் வரலாற்றை கி. மு. மூன்றாம் நூற்றாண்டுகளுக்கும் மேல் ஓர் பாய்ச்சலில் பின்னோக்கி இழுத்துச் சென்றுள்ளது. இது ஈழவரின் வரலாற்று பார்வைக்கும் திருப்பு முனையாகும்.

---

உங்கள் ஆக்கங்களை 'தர்க்கீகம்' வரவேற்கின்றது. அதே வேளையில் தர்க்கீகத்தை நீங்கள் திறனாய்வு செய்யலாம், அதன்மூலம் 'தர்க்கீகம்' மேலும் தன்னை செழுமைப்படுத்திக் கொள்ளும். உங்கள் ஆக்கங்கள் உங்கள் சமூக நிலையை எடுத்துரைப்பவையாகவும் சமூக மாற்றத்தை கோருபவையாகவும் அமையட்டும்.

**"தர்க்கீகம்"**
**த. பெ. எண்: 103, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைபிரசில் துருக்கியர்களும் இலங்கையில் தமிழர்களும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மக்காரியோஸ் தன்னை ஒரு உலகத் தலைவராக ஆக்கிக் கொள்ளும் விருப்பம் கொண்டவர், 1974ல் இவர் கிரேக்கர்களையும் துன்புறுத்தினுர் இவரது நடவடிக்கைகளால் இவருக்கு எதிராக சதி முயற்சியில் கிரேக்கர்கள் ஈடுபட்டனர். மக்காரியோஸ், சைப்பிரசை கிரேக்கத்துடன் இணைக்கும் இயக்கத்தின் (EOKA) விருப்பத்தைப் பூர்த்தி செய்யத் தவறியதனுல் அவர்கள் கிரேக்க இராணுவத்துடன் வைத்திருந்த உறவுகளைக் கொண்டு சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மக்காரியோஸ் சைப்பிரசை விட்டு ஓடியபோது, சைப்பிரசை பாதுகாப்பதற்காக ஒரு அவசரச் செய்தியை நேச சக்திகளுக்கு அனுப்பினுர். அது சைப்பிரசை துருக்கியர்களிடமிருந்து கிரேக்க தீவிரவாதிகளிடமிருந்து பாதுகாக்கும் நடவடிக்கையாகவே இருந்தது. அவ்வேளை துருக்கி அரசாங்கம் அவ்வேண்டுகோளை ஏற்று சைப்பிரசில் தலையீடை மேற்கொள்வதற்கு பிரித்தானியாவையும் அழைத்தது. ஆனுல் அப்பொழுது லண்டனில் இருந்த வில்சனின் நிர்வாகம் இவ் அழைப்பை காதில் வாங்கிக் கொள்ளாததனுல் துருக்கி மட்டும் தலையீட்டை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

## துருக்கி ஏன் தலையிட்டது?

சட்டரீதியாகவும் உளரீதியாகவும் சைப்பிரசில் தலையீடு செய்ய வேண்டிய கடமை துருக்கிக்கு இருந்தது. சைப்பிரசின் சுதந்திரத்தை பாதுகாக்கவும், அதன் ஸ்தானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட உத்தரவாத ஒப்பந்தத்தின் அடிப்படையில் அது கடமைப் பட்டிருந்தது. கிரேக்கர்களின் ஆதிக்க வெறிக்குப் பலியாகிக் கொண்டிருந்த துருக்கியர்களையும், அவர்களின் உடமைகளையும், அப்பாவி சைப்பிரியர்களையும் அனுதாப ரீதியாகக் காப்பாற்ற வேண்டிய கடமை அதற்கு இருந்தது. துருக்கியர்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட EOKA இனதும் கிரேக்க இராணுவத்தினதும் வெறியாட்டமே இத்தலையீடு ஏற்படக் காரணமாயிருந்தது;

பிரபல பத்திரிகை ஆசிரியரான "நான்சி குரோசோ', (Nancy Crawshow) "கிரேக்க வெறியர்களின் கொலை வெறிக்கு உட்பட்ட துருக்கிய சமூகத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, துருக்கி வட சைப்பிரசைக் கைப்பற்றியுள்ளது" என்று குறிப்பிடுகின்றுர். 1963 இலிருந்து 1974 வரையுள்ள இடைவெளியில் பெருமளவு அப்பாவித் துருக்கிய மக்களை கொலை செய்ததற்கும், அவர்களின் உடமைகளைக் கொள்ளை அடித்ததற்கும், 12 வருடங்களாக அபிவிருத்தி உதவிகளில் இருந்து துருக்கியர்களை ஒதுக்கியதற்கும் நட்டஈடாகவே, இக்கைப்பற்றுதலைத் துருக்கி கருதியது. துருக்கிய சமூகம், 'சைப்பிரஸ் துருக்கியர்களின் மாற்று நிர்வாகம், ஒன்றுக்கான ஒழுங்குகளை ஏற்கனவே செய்யத்தொடங்கியிருந்தது, இது துருக்கியின் தலையீட்டைத் தொடர்ந்து துருக்கியின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வட சைப்பிரஸ் பகுதியை 'சைப்பிரஸ் துருக்கிய சமஷ்டி அரசு' என அறிவிக்க வழி வகுத்தது. இது ஒரு சுதந்திர அரசு அல்ல. இது எதிர்காலத்தில் சமஷ்டி அமைப்பின் கீழ் வருவதற்கான ஒரு அரசே ஆகும். இது ஒரு அரசாக உறுதிப்படுத்தும் நோக்கம் கொண்டிராதஒருஒழுங்கே ஆகும். இவ்வொழுங்கமைப்பு சைப்பிரஸ் துருக்கிய சமூகத்திற்கெதிரான துன்புறுத்தல்கள் அடக்குமுறைகள், அழிவுகள் என்பனவற்றைத் தவிர்க்கும் முகமாக எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். துருக்கியர் பாதுகாப்பிற்கு ஒருசுதந்திர அரசை சமஷ்டி அமைப்பின் கீழ் ஏற்படுத்துதலே தீர்வு எனக் கருதப்பட்டது. ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தை நசுக்காதிருக்க இது வழிவகுக்குமென நம்பப்பட்டது. இவ்வாறுன நிலைமைகளைப்பேண மத்திய அரசாங்க அமைப்பு ஒவ்வொரு அரசுக்கும் குறிப்பிட்ட அதிகாரங்களை வழங்குதல் வேண்டும். அணிசேராமை, மனித உரிமைகள், சட்ட ஒழுங்கு அமைதியான ஒருமைப்பாடு நிலவுதை இக்குடியரசு பிரதான அடிப்படை நோக்கங்களாகக் கொண்டிருத்தல் வேண்டும்;

## ஒப்பந்தமும் ஒழுங்கு முறையும்

1977ல், தற்போதைய ஐ. நா. பொதுச் செயலாளர் முன்னிலையில் துருக்கிய தலைவர்களும் கிரேக்கத் தலைவர்களும் வரைந்த ஒழுங்குமுறைகள் மூலம் துருக்கியர் பிரச்சனைக்கு தீர்வு காணலாம் என நம்பப்பட்டது. அப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டவை ஆவன; 1. சுதந்திர அணிசேராமையைப் பேணுதல், 2. இரு சமூகங்களும் இணைந்த சமஷ்டிக் குடியரசின் பொருளாதார உறுதிப்பாட்டையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு சமூகத்தினரும் நிர்வகிக்கவேண்டிய பிரதேசங்களை ஒழுங்குபடுத்திக் கொள்வது, 3. சொத்துரிமை மற்றும் விஷேட விடயங்கள் சம்பந்தமாக பொது கலந்துரையாடல்கள் மூலம் முடிவுகளை எடுப்பது, 4. துருக்கிய சமூகத்தினருக்கு சமஷ்டி அமைப்பில் ஏதாவது பிரச்சனைகள் ஏற்படின் அவற்றை மத்திய அரசின் அதிகாரமும் இயக்கமும் தீர்த்துவைத்து நாட்டின் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பையும் பேணுதல், இவ் அடிப்படை வரையறைகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடியன. இதன்மூலம் ஒரு நீண்ட காலத்தில் பேச்சுவார்த்தைகள் மூலம் நிரந்தரமான தீர்வுக்கு வழிவகுக்கலாம். ஆனுல் தற்போது சைபிரஸ் கிரேக்க அரசியல் தலைவர்கள் குறுகிய மனேபாவத்துடன் அவற்றை நிராகரித்து வருகின்றுர்கள்


## கிரேக்க தலைமையின் வஞ்சக எண்ணம்:

கிரேக்க தலைமை இராஜதந்திர தன்மைகளைக் கைவிட்டு இயங்கிவருகின்றது. சிறுபிள்ளைத்தனமாக அவர்கள் தமது பூரண திருப்தியை மட்டும் நோக்கில் கொண்டு செயல்படுகின்றனர். அவர்கள் துருக்கியர்களின் வேண்டுகோளுக்கு இணங்கத் தயாராயில்லை, ஏனெனில் அதன் மூலம் தமது நோக்கங்கள் யாற்வைறயும் செயல்படுத்திக் கொள்ள முடியாதென்பது அவர்களுக்குத் தெரிகின்றது. சைபிரஸ் துருக்கிய சமஷ்டி அரசினுல் துருக்கிய சமூகத்திற்கு எதிரான துன்புறுத்தலையோ ஆதிக்கம் செலுத்துதலினையோ மேற்கொள்ள முடியாதென்பது அவர்களுக்குத் தெரியும், இப்பிரச்சனைகளை யதார்த்தபூர்வமாக தீர்த்துவைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தக்கூடிய உறுதியான தலைவர்

**கலாநிதி, சலாஹி ஆர். சொனியல்**

கள் அவர்களிடையே இல்லை. சைப்பிரசில் இப்பிரச்சனையை தொடர்ந்து நீடிக்க விடுவதன்மூலம் கிரேக்கர்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்டு தமது நலன்களைப் பேணிப் பாதுகாப்பதே அவர்களின் நோக்கமாக உள்ளது. சட்ட அரசு என போலித்தனமாகத் தம்மைக் காட்டுவதின்மூலம் வல்லரசுகளினுல் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு கிடைப்பதுபோல் கிடைக்கும் நன்மைகள் யாவற்றையும் தாம் அனுபவித்து வருகின்றனர். தற்போதைய நிலை நீடிப்பதன் மூலம் சைப்பிரசிலும் துருக்கியிலும் உள்ள துருக்கியருக்குத் தீங்காத இருக்குமென்றுநம்புகிறுர்கள் இப்போக்கு நீண்ட காலத்தில் துருக்கியர்களைப் பின்தள்ளும் அவ்வேளை கிரேக்கர்களை முன்தள்ளும். இன்னும் சில வருடங்களில் அல்லது சில தசாப்தங்களில் அல்லது சில நூற்றுண்டுகளில் துருக்கியர்கள் [illegible] கிரேக்கர்களையும் ஒன்றுபடுத்தும் கிரேக்க மாமன்னனின் கொன்ஸ்தாந்தின் கனவை நனவாக்கலாம் என்று நம்புகிறுர்கள். ஆனுல் அது நடைபெறுமா?

துருக்கியர்கள் தம் எதிர்கால வாழ்வைக் கிரேக்கரின் கையில் ஒப்படைப்பார்கள் என்று நான் நம்பவில்லை, ஓர்இரு பிராந்திய சமஷ்டி அரசமைப்பினையே விரும்புகின்றனர், அதன்மூலமே கிரேக்கரும் துருக்கியர்களும் ஒருவரையொருவர் சுரண்டாமலும், ஒருவரையொருவர் ஆதிக்கம் செலுத்தாமலும், மனித கௌரவத்துடனும், பாதுகாப்புடனும் அருகருகே வாழும் நிலைபேற்படும். இதுவே இப்பிரச்சனையைத் தீர்க்கக்கூடிய அதி சிறந்த தீர்வாகும். சைப்பிரசிற்குத் தற்போது தேவைப்படுவது ஒருசாராரின் வெற்றியல்ல, ஏனெனில் அது மறுசாராரின் தோல்வியாகக் கருதப்படும், எனவே அங்கு தேவைப்படுவது முழுசைபிரசுக்குமான வெற்றியாகும் அது எவ்வாறெனில், இரு இன மக்களும் ஒரு நியாய பூர்வமான உடன்பாட்டின் மூலம் சகவாழ்வுக்கும், ஒற்றுமைக்கும் அத்திவாரம் இடுவதின் மூலமேயாகும். அதன் பின்பே சைப்பிரசை மறுசீரமைப்பு, அபிவிருத்தி. செழிப்பு, மகிழ்ச்சி ஆகியவற்றிற்கான சரியான பாதையில் இட்டுச் செல்லமுடியும்.




## நாம் கற்றுக் கொள்ள வேண்டியது என்ன?

என்னுடைய தமிழ் நண்பர்கள், சைப்பிரஸ் வாழ் துருக்கியர்களின் துன்பகரமான

(7ம் பக்கம் பார்க்க)

## அக்கரையில் ஒலிக்கும் குரல்

அதிகார வர்க்கங்களும்
ஆதிக்க வெறியர்களும்
இக்கரைக்கு எமை அனுப்பி
எதிரிகள் ஆக்கி விட்டார்.

அகதிகளாய் ஆக்கப்பட்டோம்
ஆடுமாடாய் ஏற்றப்பட்டோம்
'சூரியன்கள்' சுட்டதன்றி
செய்த நன்றி ஏதுமில்லை.

தமிழகத்தின் வீதிஎங்கும்
தேனும் பாலும் ஓடு தென்னும்
உடன் பிறப்பின் பேச்சை நம்பி
ஊரை விட்டே ஓடி வந்தோம்

வாழும் வழி உண்டு என்றுர்
வாழ வகை செய்வோம் என்றுர்
"மண்டபம் காம்ப்" எல்லைக்குள்ளே
மனிதாபிமானம் (கூட) இல்லையடா

வாழ்வதற்கு நாடே அற்ற
நாதியில்லா ஈழவரே
கேட்குது பார் தென் திசையில்
தர்க்கீக(ம்)ப் போர் முழக்கம்.

சுரண்டல் கொள்ளைக் காரரிடம்
இலங்கைத் தீவு போகையிலே
'ஈழம்' மண்ணைக் காத்திடவே
பிறந்தது காண் தர்க்கீகம்.

ஒடுக்கப்படும் மக்களுக்காய்
குரல் கொடுக்கும் தோழர்களே
கேட்டீர்களா ஈழத்தின்
தர்க்கீக(ம்)த் தத்துவத்தை.

"அகதி மகன்"
மணப்பாறை, தமிழ்நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழவர் இடர் தீர...

ஈழவர் தம்மிடர் ஈண்டு தொலைய வேண்டுமானல் அவர்கள் தம் இடர்தான் என்னவென இயங்கியல் ரீதியில் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் ஒரு தீர்க்கமான முடிவையும் அதற்கேற்ப தர்க்கிக பாதையையும், வகுக்க முடியும். கடந்தகாலத்தில் ஈழவரின் இடர்ப்பாடுபற்றி ஆழ்ந்து நோக்கப்பட்டதோ, அல்லது அவ்விடர்ப்பாட்டிற்கான அடிப்படைக் காரணங்கள் ஆராயப்பட்டதோ என்ருல் சந்தேகம் தான் எழும். ஒவ்வோர்கால கட்டத்திலும், நம்மக்களின் ஒவ்வோர் சாராரை எதிர் நோக்கிய அன்ருடப் பிரச்சனேகளை மையமாக வைத்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதே அன்றி- மக்களின் அடிப்படைப் பிரச்சனேயை பின்னணியாக வைத்து அதன் நிரந்தர பரிகாரத்திற்கான கோரிக்கையோ, அல்லது அக் கோரிக்கையை பிரதிபலிக்கும் கொள்கைத் திட்டமோ, அக் கொள்கையும், கோரிக்கையும் இணைந்த இலட்சிய போராட்டமோ. நம் மக்களால் மேற்கொள்ளப்பட்டதோ என்ருல் இல்லையென்றே சொல்ல வேண்டும் கடந்த முப்பது வருடகால அரசியல் அனுபவம் கற்பிக்கும் வரலாற்று பாடம் இது. இல்லாவிட்டால் ஐம்பதுக்கு ஐம்பது கோரி, பின் சமஷ்டி அரசியல் அடிப்படையிலான தமிழரசு கோரி, இப்போ தனிநாட்டு கோரிக்கையை முன்வைப்பார்களா? இப்படி காலத்துக்குக் காலம் மாற்றுங் கோரிக்கையை முன் வைக்கும் நம்மவர் நாளை என்ன கோரிக்கையை முன் வைத்திருப்பார்களோ எனக் கேட்கத் தோன்றுகின்றது. இதனுல் தான் ''இன்று எழுந்துள்ள கேள்வி மாவட்ட சபை மசோதா பற்றியதல்ல, இலங்கைவாழ் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றி ஈழக் கோரிக்கை பற்றி'' எனக் கூறினேம்.

கடந்தகால அனுபவத்தில் எந்த ஒரு கோரிக்கையும், நிரந்தர கோரிக்கையாக இருக்கவில்லை. ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கைக்காக மக்கள் போராடினுர்களோ என்ருல் இல்லை; அல்லது அக்கோரிக்கையை முன்வைத்தவர்கள் அதற்கேற்ப மக்களை நெறிப்படுத்தினுர்களோ என்ருல் அதுவும் இல்லை; மக்கள் தமது உரிமை கோரி நெறிப்படுத்தப் பட்டிருந்தால், கடந்த 30 ஆண்டுக்குள் மூன்று கோரிக்கைகளை முன் வைத்திருப்பார்களா? இங்கு தான் வெறும் கோரிக்கைக்கும், கோரிக்கையும் கொள்கையும் இணைந்த இலட்சியப் பாதைக்கும், இடையிலான தார்பரிய வேறுபாடுகளை உணர முடிகின்றது. அதனுலேயே ஈழக்கோரிக்கையின் முரண்பாடுகளை முதலில் பார்க்க வேண்டும்: ஈழவர் தம் பிரச்சனேயென்ன? அவர்கள் தம் இடர்பாடுதான் என்னவென புலப்படும் பிரச்சனேயை தெளிவாகப் புரியும் போது, இடர்பாடுகள் இணக்கம் காணமுடியாத அளவுக்கும், மறைக்க முடியாத அளவுக்கும், வெளிப்படையாகும், அந்த வெளிப்பாட்டில் வெடித்து கிளம்புவதே விடிவுப் பாதை.

கடந்தகாலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கென முன்வைக்கப்பட்ட மூன்று கோரிக்கைகளுக்கு மிடையே பரிமாண வேறுபாடுகள் இருப்பினும், ''ஐம்பதுக்கைம்பது'' ''சமஷ்டிக்கு உட்பட்ட தமிழரசு'' கோரிக்கைகளுக்கும், இறுதியான ஈழக் கோரிக்கைக்கு மிடையே ஒரு பாரிய அடிப்படை வேறுபாடு உண்டு. முன்னவை இரண்டும் மொழிவாரி இன உரிமைப்பாடு ரீதியிலானவை. பின்னது தமிழ்தேசிய உடமைப்பாடு ரீதியிலானது. முன்னையவை அரசியல் சாசன ரீதியில் பெறக்கூடியது. பின்னது மக்களின் மறுமலர்ச்சியில் மலர்வது. அந்த மறுமலர்ச்சியுகத்தை உருவாக்கும் ஈழவரின் உடமைப்பாட்டை, இன்றைய ஈழக் கோரிக்கை பிரதிபலிக்கின்றதோ என்ருல் கேள்விக்குறியாகவே உள்ளது.

## ஈழக் கோரிக்கையின் முரண்பாடு

ஒரு இனத்தின் சமூக பொருளியலிலான அரசியல் மேம்பாட்டிற்கு (Social Economic and Political Emancipation) அந்த இனத்தின் சமூக அமைப்பில் அடிப்படை மாற்றம் ஏற்பட வேண்டும். அந்தமாற்றத்தை ஏற்படுத்துபவர்கள், அந்த இனத்தின் சமூக அமைப்பில் ஒடுக்கப்பட்டு அடித்தளத்தில் வாழும் மக்கள் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தமட்டில் இன்று தேசிய ரீதியிலும் சரி, இனரீதியிலும்சரி, அடித்தளத்தில் இருப்பவர்கள் மலையகத்தோட்டத் தொழிலாளர்கள். இவர்களை இம்மிகூட இன்றைய ஈழக் கோரிக்கை பிரதிபலிக்கவில்லை. ஆனுல் பண்ணுகத்தில் ஈழக்கோரிக்கை பரிணுமம் ஆன போது அதன்கர்த்தாக்களில் ஒருவராயிருந்தவர் சௌமியமூர்த்தி தொண்டமான். இவர் இன்று ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக விளங்கும் ஸ்ரீலங்காவின் அரசாங்கத்தில் அதுவும் ஈழக் கோரிக்கையை அறவே மறுக்கும் ஆட்சியில் மந்திரியாகவுள்ளார்.

இவரது எண்ணக் கோரிக்கையில் ஈழ அபிலாசை ஈடாட்டம் கண்டு விட்டதால் மலையக மக்களின் முடிவும் அதுவே என்று அர்த்தமா? இல்லை. ஈழப் பிரகடனத்துக்கு சௌ. தொண்டமான் இணைய முன் மலையக மக்களின் மனப்பாங்கை மதிப்பீடு செய்தாரா? அப்படி மதிப்பீடு செய்திருந்தால், ஈழக் கோரிக்கையிலிருந்து பிரிக்க முடியாத ஈழப்பிரதேச எல்லை குறித்து குரல் எழுப்பி அதில் மலையக மக்களின் நிலையென்ன என விளக்கப்பட்டிருக்கும். அப்படி விளக்கப்படாத முரண்பாட்டை ஈழக் கோரிக்கையில் காணக் கூடியதாகவிருக்கிறது.

## ஈழக் கோரிக்கையில் ஜி ஜி.

அடுத்து ஈழப்பிரகடனத்தின் மற்றுமொரு பொறுப்பாளி காலஞ்சென்ற ஜீ. ஜீ. பொன்னம்பலம். இவர்தான் ஐம்பதுக்கைம்பது கோரிக்கையை முன்வைத்தவர். இந்த ஐம்பதுக்கைம்பது கோரிக்கையையே நிதர்சனமாக்காமல் மோசடி செய்யும் வண்ணம், சுதந்திர இலங்கையின் முதல் பாராளுமன்றத்தில் இலங்கைப்பாட்டாளி வர்க்கத்தின் முதுகெலும்பான, இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின், தொழிலாளர் வர்க்கத்தின் வாக்குரிமையை பறித்து நாடற்றவர்களாக்கிய, மரணசாசன மசோதாவரின பிரஜா உரிமை சட்டத்திற்கு கைச்சாத்திட்டவர் ஜீ. ஜீ. இப்படி தமிழர்களுக்கு சமஅந்தஸ்த்து கேட்டுவிட்டு தமிழர்களின் சமபாதியினரின் உரிமைகளையே உருக்குலைத்த ஜீ. ஜீ.யும், அந்த மக்களின் உரிமைகள் பறிபோவதற்கு காரணமான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இன்று அங்கம் வகிக்கும் தொண்டமானும், ஈழக் கோரிக்கையின் முன்னுள் பங்காளிகள் என்ருல் தர்க்கீகரீதியில் மற்றுமொரு கேள்வி எழுகின்றது. ஈழக்கோரிக்கை முன்னைய கோரிக்கைகளைப்போல் நிதர்சனமற்ற நிச்சயமற்ற கோரிக்கையா? இல்லை, அரசியல் வாதிகள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப தத்

# மூன்றுவது உலகப் போர் மூளுமா?

உலகின் பலபாகங்களிலும் இன்று தோன்றியுள்ள நெருக்கடிகள் உக்கிரமடைந்து நாளை எந்நிலையைத் தோற்றுவிக்குமோ என்ற அச்சத்திலேயே உலக மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ருர்கள். இந் நிலையில் ஆங்காங்கே புகைந்து கொண்டிருக்கும் பிரச்சனேகள் நாளை பூதாகாரமாக வெடித்து மக்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது: நவீன அணுவாயுத உற்பத்தி வளர்ச்சியின் இன்றைய கால கட்டத்தில், நாடுகள் தமக்குள்ளே மோதிக் கொள்ளத் தலைப்படுவதும், அதைத் தொடர்ந்து ஏனைய நாடுகளின் நிலையிலும் பதட்டம்ஏற்பட்டு அச்சுறுத்தல்களும், அபாய அறிவிப்புக்களும் நிகழ்ந்தவண்ணமே இருக்கின்றன.


இவற்றின் இன்றைய நிலை பரிணமித்து, நாடுகளை மூன்ருவது உலகப் போருக்கு இட்டுச் செல்லுமோ! என அரசியல் அவதானிகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முதலாவது உலகப்போரையும், இரண்டாம் உலகப் போரையும் நினைவு கூர வேண்டியது அவசியம். 1914ம் ஆண்டு காலகட்டங்களிலும், 1940ம் ஆண்டு காலகட்டங்களிலும் நிகழ்ந்த முதலாம், இரண்டாம் உலகப் போர்கள் முழுக்க ஆதிக்க வெறித் தன்மைகளையே கொண்டிருந்தன; ஏகாதிபத்திய வல்லரசுகள் தமது அதிகாரங்களை விஸ்தரிப்பதற்கும் ஏனைய நாடுகளை அடிமை கொள்வதற்குமான நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே போர்கள் மூண்டன. ஆனுல் இன்றைய நிலையிலோ உலக நாடுகள் இரண்டு முகாம்களாகி அணுவாயுத உற்பத்தியில் போட்டா போட்டியாக வளர்ந்து வருகின்றன. ஒருபுறத்தில் முதளித்துவ ஏகாதிபத்திய நாடுகளும் மறுபுறத்தில் சோசலிச நாடுகளும் இரு துருவங்களாக வளர்ந்து நிற்கின்றன.

ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு எதிராக, லத்தீன் அமெரிக்காவிலும், ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகளிலும் எழுந்துள்ள நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக சகல முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளும் ஒருங்கிணைந்து தம்மைத் தயார்படுத்தி வருகின்றன. லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்ருன நிக்கரகுவாவில் நடைபெற்ற புரட்சியை அடுத்து அயல் நாடுகளில் எழுந்துள்ள புதிய உத்வேக நிலைமைகள் அமெரிக்காவையே கதிகலங்கச் செய்துவருகின்றது. இதே போல் தென் ஆபிரிக்காவில் பலங்கொண்டுள்ள வெள்ளையர்கள் ஏனைய ஆபிரிக்க நாடுகளால் தமக்கு ஆபத்து வருமா என அஞ்சி தம்மை அணுவாயுத பலத்தால் விஸ்ரித்து வருகின்றனர்.

அடுத்து மத்திய கிழக்கில் அமெரிக்க ஆதிக்கத்தை விரட்டி அடித்த ஈரான் மீண்டும் ஈராக்குடன் போரிட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த நிலை முடிவுக்குக் கொண்டு வராத நிலையில் சிரியா-ஜோர்தான் படைக்குவிப்பும் நிகழ்ந்தது. இச்சம்பவங்கள் மத்தியகிழக்கிலேயே மிகவும் பாரிய பிளவுகளை ஏற்படுத்தியுள்ளன ஜோர்தான் ஈராக்கிற்கு உதவியளிக்க முற்பட்டதும் சிரியா,ஜோர்தான் எல்லையில் தனது படைகளைக் குவித்ததும் நடைபெற்ற சம்பவம், அதன் தொடர்ச்சியாக ஜோர்தானுக்கு அமெரிக்காவும், இஸ்ரவேலும் உதவி அளிக்க முற்பட்ட அதே சமயம் தென் லெபனுனில் பாலஸ்தீனியர்கள் இஸ்ரவேலிய விமானங்களால் தாக்கப்பட்ட சம்பவமும் நடைபெற்றது இன்று. எழுந்துள்ளசிறிய நெருக்கடிகளை உச்சக்கட்டமாக்கி தமது லாபங்களைத் தேட அமெரிக்காவும் அதன் பின்னணி நாடுகளும் முந்திக் கொண்டு நிற்கின்றன.

இதேபோல் ஐரோப்பாவிலும் போலந்தில் எழுந்த உள்நாட்டு பிரச்சனேகளை தமக்குச் சாதகமாக்க முனைந்து நிற்கும் அமெரிக்கா போன்ற நாடுகள் பாரிய அளவிலான மோதல்களுக்குத் தூபமிட்டு வருகின்றன. இப்படியே தமது ஆதிக்க நடவடிக்கைகளினுல் விரட்டப்பட்டுவரும்,ஏகாதிபத்திய வல்லரசுகள் மீண்டும் தமது ஆதிக்க நிலைநாட்டலுக்கான மோதல்களுக்கு உரிய சந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமது நலனுக்காகவும், தாம் சார்ந்த வர்க்கங்களின் நலனுக்காகவும், தேர்தல் காலத்தில் வெளியிடும் வாய்வீச்சா ஈழக்கோரிக்கை என கேட்க வேண்டியுள்ளது. இதனாலேயே மீண்டும் ''இன்று எழுந்துள்ள கேள்வி இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம்பற்றி ஈழக் கோரிக்கைபற்றி'' எனக்கூற முற்படுகின்றோம்

இந்த கேள்வியினை கேட்க முற்படுபவர்கள் தர்க்கீகக் கண்ணோட்டத்தவர்களாயின், நிலைமையை இயங்கியல்ரீதியில் அணுகவேண்டும், இயங்கியல் ரீதியில் அணுகுவோருக்கு சரித்திர பின்னணியும், சமூகசூழ்நிலையும் புரிய வேண்டும். அந்தவகையில் ஈழக்கோரிக்கை எழுந்த பின்னணியை பார்க்க வேண்டும்.

ஈழக் கோரிக்கை பண்ணுகத்தில் பரிணுமமாகி 1977ம் ஆண்டு தேர்தல் மூலம் தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்டபோதிலும், 'ஈழம்' என்ற நாட்டு வேட்கை நம்மவரில் ஒவ்வோர் சாரரின் பாரம்பரிய பிரியமாக இருந்து வந்தது. இல்லாவிட்டால் முதலில் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையை அரசியல் ரீதியில் சுந்தரலிங்கம் முன்வைத்திருப்பாரா? இல்லை பின் சுயாட்சிக் கழகம் சுயநிர்ணயம் கோரிஇருக்குமா? இதை எல்லாம் தட்டிக்கழித்து, தமிழரசுக் கட்சியினர் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியினராக, ஈழக் கோரிக்கையை வலியுறுத்தி வருவர்களா?

இங்கு இயங்கியல் ரீதியில் ஆய்வோரும் தர்க்கீக கண்ணோட்டமுடையோரும் கருத்தில் கொள்ள வேண்டியது நம் இனத்தின் முதுகெலும்பான பாட்டாளி வர்க்கமான மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டபோது, அந்த மக்களின் உரிமைகளை உடமையாக்க ஈழக்கோரிக்கை எழவில்லை. ஏன் தமிழ் பாமர மக்களின் பாரம்பரிய நிலச் சொத்தான அல்லை, கந்தளாய், அம்பாறை பறிபோன போது ஈழக் கோரிக்கை எழவில்லை. ஆனுல் நடுத்ர வர்க்கத்தினரின் அன்ருட அபிலாசைகள், நாளாந்த நலன்கள் பாதிக்கப்பட்டபோது தனிநாடு, சுயநிர்ணயம், ஈழவிடுதலை, பிரிவினை, ஈழம் என்ற கோட்பாடுகள் ஒவ்வோர் சாரரால் அவர்தம் சிந்தனை நிலைப்பாட்டையொட்டி எழுப்பப்பட்டது.

ஆரம்பத்தில் தனிச் சிங்கள மசோதாவால் பாதிக்கப்பட்டவர்கள் தமது பிரச்சினை தமிழர் பிரச்சினை என நினைத்தார்கள். பின் உயர் கல்வி பெற முடியாதவர்களும், தரப்படுத்தலால் தத்தளித்தவர்களும், பல்கலைக்கழகப் படி ஏற முடியாதவர்களும் வேலைவாய்ப்பற்றவர்களும் தத்தமது பிரச்சனைகளை தமிழ் மக்களுடைய பிரச்சினையாக கருதினுர்கள். அதற்கேற்ப தமது நடுத்தர வர்க்க நலன்களையும், உரிமைகளையும், பேணவே கோரிக்கை எழுப்பதொடங்கினர்; இதன் ஒட்டு மொத்தமான பரிணுமமே பண்ணுகப் பிரகடனம். ஆகவே இப் பிரகடனம் நடுத்தரவர்க்கத்தின் நலன் உரிமைக் கோரிக்கையா? அல்லது நம்மினத்தின் உரிமைத் தேவையா?

தர்க்கீகத் தத்துவத்தின் மற்றுமொரு தாற்பரிய உண்மையை தமிழர்வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. அதாவது ஒரு இனத்தின் அல்லது சமூகத்தின் அடித் தளத்தினமான பாமரரும், பாட்டாளிகளும்(அவர்கள் பெரும்பான்மையாயினும்) பாதிக்கப்படும்போது, அச்சமூகத்தின் உயர் மட்டத்தினரும், நடுத்தரவர்க்கத்தினரும் மௌனம் சாதிப்பர். ஆனுல் உயர் மட்டத்தினரும், நடுத்தர வர்க்கத்தினரும் பாதிக்கப்படும்போது கூக்குரல் எழுப்புகின்றனர்;

இந்த கூக்குரல் தானு ஈழக் கோரிக்கை? அல்லது ஈழவர்தம் உடமைக்கான தர் ஈழக் கோரிக்கை? எனக் கேட்கின்றோம்.

வரலாற்றில் அரசியல் நாகரீகம் பேணப்பட்டகாலந் தொட்டு ஒரு சமூகத்தினதோ, நாட்டினதோ இல்லை இனத்தினதோ அபிலாசைகளை பிரதிபலித்து முதலில் கூக்குரல் எழுப்புவது நடுத்தர வர்க்கத்தின் உயர் மட்டத்தினரே இது இயங்கியல் ரீதியில் அரசியல் நியதி.

அந்த வகையில் இலங்கைத் தமிழர்களின் ஒருசாரரின் கோரிக்கையாக அல்லாமல் ஒட்டுமொத்தமாக நடுத்தர வர்க்கத்தின் தனிநாட்டு உரிமைக் கோரிக்கையாக உருவெடுத்துள்ளது ஈழக் கோரிக்கை என்பது உண்மை; ஆனுல் பண்ணுகத்தில் பரிணுமமான ஈழக் கோரிக்கை வெறும் தனிநாட்டு உரிமைக் கோரிக்கையல்லாமல், ஈழவரின் தேசிய அந்தஸ்து கோரிக்கையாகவும், பாமரமக்களினதும் பாட்டாளி வர்க்கத்தினதும் உடமைப் பாட்டுக்கான கிளர்ச்சியாகவும் அமைய வேண்டும் அந்தப் பணியில் அறிவுஜீவிகள் ஈடுபட வேண்டும்;

# இலங்கை எங்கே.. போகிறது?

இலங்கையின் இன்றைய போக்கினை தர்க்கீகமாக ஆராயும் எவரும் இலங்கை நவ குடியேற்ற வாதம் அல்லது நவ காலனித்துவவாதம் என்னும் பயங்கர பிடியினுள் சிக்கியிருப்பது துல்லியமாக தெரிவதை உணர்கின்றனர். சுதந்திரம் பெற முன்னர் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் குடியேற்றவாதப் பிடியினுள் சிக்கி சீரழிந்த இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் நவகுடியேற்ற வாதத்தினுள் சிக்க முனையும் அபாயத்தை பொதுமக்கள் உணரவேண்டியது அவசியம். இதிலுள்ள வேடிக்கை என்னவெனில் எந்தக்கட்சியினர் இலங்கைக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தோம் என மார்பு தட்டினரோ அக்கட்சியே இன்று இலங்கையை அந்நிய பல்தேசியக் கம்பெனிகட்கு (Multi Nationals) அடகு வைக்க முனைவதாகும்.

இத்தருணத்தில் நவகுடியேற்ற வாதம் என்ருல் என்ன? என்பதைப் புரிந்து கொள்ளல் அவசியமாகும். அண்மையில் ஸ்ரீலங்காவின் வர்த்தக மந்திரி அத்துலத்முதலி பிரெஞ்சு நாட்டு முதலீட்டாளரை வரவேற்று பேசிய போது உதிர்த்த கருத்துக்களை மனதில் கொள்ளல் நலம். அவர் முதலீட்டாளரை நோக்கி ''நீங்கள் கொடையாளிகள் என்ருே தர்மவான்கள் என்று நினைத்தோ இங்கு முதலீடு செய்ய வேண்டாம் அதை நாமும் வரவேற்கவில்லை. எங்களிடம் இல்லாதது உங்களிடம் உண்டு. உங்களிடம் இல்லாதது எங்களிடம் உண்டு'' என்ருர். இதன் பொருள் என்ன? எங்களிடம் முதல் இல்லை அது உங்களிடம் உண்டு. ஆனுல் எங்களிடம் நீங்கள் சுரண்டுவதற்கு ஏற்ற மூலவளங்கள் உண்டு; கல்விகற்ற வேலையற்ற தொழிலாளர்கள் பலர் குறைவான கூலியில் கடமை புரியும் நிலையில் உள்ளனர் என்பதாகும். இவற்றைவிட இலங்கை அரசு பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழுச் சட்டப்படி (Greater Colombo Economic Commission) சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழிலில் ஈடுபடும் அந்நிய கம்பெனிகட்கு எவ்வளவோ பாதுகாப்புக்களை வழங்கியுள்ளது. பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு என்பது 1978ல் அரசினுல் நியமிக்கப்பட்ட கொழும்புப் பிரதேச பொருளாதார அபிவிருத்திக்கு பொறுப்பான ஆணைக்குழு ஆகும்.

இதை மேலும புரிந்து கொள்வதாயின் நவ குடியேற்ற வாதத்தினுள் சிக்கும் நாட்டில் காணப்படும் இயல்புகளை, இலங்கையோடு பொருத்திப் பார்ப்பது நன்மை பயக்கும். அவையாவன:-

(அ) தடையற்ற வர்த்தகம்:- இலங்கையை பொறுத்தவரையில் இக்கொள்கை எவ்வளவு தீவிரமாக பின்பற்றப்படுவதை யாவரும் உணர்வர். இதன் காரணமாக உள்ளூர், கைத்தொழில்கள் பலவற்றிற்கு மூடுவிழா நடைபெற்றதையும், உள்ளூர் விவசாய உற்பத்திப் பொருட்கள் சந்தை வாய்ப்பின்றி இருப்பதும் நாமறிந்ததே.

(ஆ) அடிக்கடி மதிப்பிறங்கும் நாணயம்; இலங்கையின் நாணயப் பெறுமதி எவ்வளவு தூரம் குறைந்தது என்பதையும் யாவரும் அறிவர். பொருளாதாரச் சந்தையில் இலங்கையின் நாணயப் பெறுமதி மிதக்கவிடப்பட்டுள்ளது. அதாவது ஒவ்வொரு நாளிலும் உள்நாட்டு, வெளிநாட்டு நாணயத்தைப் பொறுத்து மத்தியவங்கியே நாணயத்தின் பெறுமதியை தீர்மானிக்கிறது. இலங்கையின் நாணயத்திற்கு நிலையான பெறுமதி கிடைக்காததன் மூலம் அதிக நன்மையை வெளிநாட்டுக் கம்பனிகளே பெறும்,
உதாரணமாக

சில வருடங்களுக்கு முன்பு:

1 £ = 15 ரூபா (1 இங்கிலாந்துப் பவுண்)
1 $ = 7 ரூபா (1 அமெரிக்கடாலர்)

இன்று:

1 £ = 4? ரூபா (1 இங்கிலாந்துப் பவுண்)
1 $ = 16 ரூபா (1 அமெரிக்கடாலர்)

[7-ம் பக்கம் பார்க்க]

தர்ப்பத்தை எதிர்நோக்கிய வண்ணமே உள்ளன.

இச் சம்பவங்களுக்கு மத்தியிலேயே சோவியத் ஜனுதிபதி பிரஸ்நேவ் இந்தியாவிற்கு விஜயம் செய்தமை ஏகாதிபத்திய நாடுகள் மத்தியில் இன்னும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 1973 ல் நடைபெற்ற இந்திய பாகிஸ்த்தான் யுத்தத்தின் போது பாகிஸ்தானுக்கு உதவ அமெரிக்க கடற்படை பாரசீகவளை குடாவிற்கு நகர்ந்ததை அறிவீர்கள். இப்படியான நிகழ்வுகளை முறியடிக்கும் நோக்கத்திஞலுமே இந்திய சோவியத் பர்துகாப்புத் திட்டங்கள் அமைந்துள்ளன. இதே வேளையில் அமெரிக்காவின் கைப்பொம்மையான சவூதி அரேபியா இளவரசர் மஹ்த் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து, ''பாகிஸித்தானின் பாதுகாப்புக்கு நாம் உறுதுணையாக இருப்போம்'' என வலியுறுத்தினுர்.

எனவே இப்படியான சம்பவங்கள் தினமும் அதிகரித்து வருவதும், ஒன்றையொன்று பயமுறுத்தி வருவதும் உலக அமைதியில் பங்கம் ஏற்பட்டு புதிய நிலைமையினைத் தோற்றுவித்துள்ளது. இந் நிலைமையில் வீழ்ச்சி அடைந்து வரும் ஏகாதிபத்திய வல்லரசுகள் தமது பலத்தை காட்ட முனைவது போன்ற சம்பவங்களினுல் மற்றுமோர் உலக யுத்தம் தோன்றும் சாத்தியக் கூறுகளை அவதானிக்லாம். இந் நிலைமையினுல் சுரண்டப்பட்டு, அடிமைப்பட்டு கிடக்கின்ற பாட்டாளி வர்க்க மக்களே மிகவும் பாதிப்புக் குள்ளாவர். எனவே இந் நிலைமையினை நன்குணர்ந்து சுரண்டல் ஆதிக்க வெறியர்களுக்கு பாடம் புகட்ட வேண்டியது உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் தலையாய கடமையாகும். ●

## சுய நிர்ணயக் கொள்கையும் ஐ. நா. வும

ஐக்கிய நாடுகள் சபையானது, மக்களினங்களின் சுயநிர்ணய உரிமையின் மாற்ற முடியாத தன்மையையும், காலனித்துவ நாடுகள் மக்களுக்கு விரைவாக சுதந்திரம் வழங்க வேண்டிய தேவையையும், மீண்டும் உறுதி செய்துள்ளது.

காலனித்துவ மற்றும் அந்நிய ஆட்சியின் கீழுள்ள மக்களினங்களின் சுயநிர்ணய உரிமை சம்பத்தப்பட்ட ஐ. நா. தீர்மானங்களை, ஐக்கிய நாடுகள் சபையின் எல்லா உறுப்பு நாடுகளும் பூரணமாக நிறைவேற்ற வேண்டும் என்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் மூன்ருவது குழு கேட்டுக் கொள்கிறது. இவ்வறிக்கை ''நேட்டோ'' (வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பு -அமெரிக்கா – பிரிட்டன் போன்ற ) நாடுகளின் கொள்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறது.

இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 109 தூதுக்குழுக்கள் வாக்களித்தன என்பதும், மேலைய நாடுகளும் இஸ்ரேலும் எதிர்த்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (டாஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஊர்

# மன்னாரிலும் ஊடுருவல்

இலங்கைத் தீவின் வடமேற் பகுதியில் அமைந்துள்ளதும் சுமார் 778 சதுரமைல் பரப்பளவையும் கொண்டதுமான மன்னார் மாவட்டத்தின் ஒரு பகுதியான வங்காலை வாசியான நான், இம் மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் இன்னல்களை ஏனைய எமது மக்களுடன் பகிர்ந்து கொள்ள விழைந்தே இக்கட்டுரையை வரைகின்றேன். எனது கிராமத்தைப் பற்றி தனியே நான் விளக்குவதைவிட பொதுவாக மன்னாரைப் பற்றி விளக்குவதனால் பரிணமித்து வரும் பல பிரச்சனைகளை ஈழவர் நன்கறிந்து கொள்ள வாய்ப்புண்டு என்றே நம்புகிறேன்.

பொருளாதார உற்பத்தியில் ஓரளவு தன்னிறைவு கண்டு வரும் எமது மக்கள் தமது வாழ்வில் எந்தவித அபிவிருத்தி மாற்றங்களையோ அன்றி வசதிகளையோ அறியாதவர்களாகவே உள்ளனர். இந்நிலைக்குக் காரணம் திட்டமிட்ட செயல்தானே! என எண்ணுமளவிற்கு சாத்தியக் கூறுகள் வளர்ந்து வருவதை நாம் காணுமலில்லை. தார்மீக அரசு என்றும், தர்மிஸ்டர்கள் என்றும் தங்களைத் தம்பட்டம் அடிக்கும் எதேச்சாதிகார சிங்கள சோவனிச அரசு திட்டமிட்டு நடாத்திவரும் சிங்களக் குடியேற்ற வாதத்திற்கு இரையாகி வரும் ஈழப்பகுதிகளில் மன்னாரும் தப்பித்துவிடவில்லை என்பதனை இங்கு தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இங்கு திட்டமிட்டு உருவாக்கிவரும் சிங்களக் குடியேற்றங்களுக்கு வழங்கிவரும் அரசு உதவிகளும், வசதிகளும் காலங்காலமாக உழைத்து வாழ்ந்து வரும் தமிழ்ப்பேசும் மக்கள் இதுவரை கண்டறியாதவர்களே. எனவே இவற்றைநாம் ஆழமாகப் பார்க்குமுன்பு மன்னார் மாவட்டத்தைப்பற்றி நாம் அவதானிப்போம்.

இம்மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 95,851என கடந்த ஆண்டு மதிப்பிடப்பட்டது. இவற்றில் கிட்டத்தட்ட 5000க்கும் மேற்பட்டவர்கள் சிங்களமக்களாகும். இம்மாவட்டத்தில் வாழுகின்ற பெரும்பாலான மக்கள் விவசாயிகளாவர். ஏனையோர்களில் மீன்பிடித் தொழிலாளர்களும், வியாபாரிகளும் அடங்குவர். மன்னார் வரண்டபிரதேசமாக இருந்த போதிலும் வேளாண்மையில் ஏனையமாவட்டங்களைவிட கடந்த ஆண்டுகளில் முன்னணியிலே நிற்பதைக்காணலாம். இப்பகுதியிலுள்ள குளங்கள் புனரமைக்கப்படாத நிலையிலிருந்தும்கூட இம் மக்கள் தமது முயற்சியை கைவிடாது தொடர்ந்தும் உழைத்து வருகின்றனர். தென்பகுதிகளில் மகாவலி அபிவிருத்தி யொன்று எவ்வளவோ பணத்தை இறைத்து வரும் அரசு, எமது பகுதிகளில் பாழடைந்து வரும் குளங்களைப் புனரமைப்புச் செய்வதில் அசிரத்தை காட்டி வருவது இனவாதப் போக்கே.

## ஆக்கிரமிப்பு

மன்னார் மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளான தலைமன்னார், பேசாலை, தாள்வுபாடு, வங்காலை, பனங்காட்டுக்கொட்டில், எருக்கலம்பிட்டி, பள்ளிமுனை, விடத்தல்தீவு, அரிப்பு, சிலாபத்துறை, முள்ளிக்குளம், கொண்டச்சி ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் மீன்பிடித் தொழிலையே பெரும்பாலும் மேற்கொண்டு வருகின்றனர். இவர்களிற் சிலர் மீன்பிடித்தொழிலுடன் வேளாண்மைச் செய்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். இப்பகுதிகளை அண்டியுள்ள கடலோரப்பகுதிகளில் கார்த்திகைமாதத்திற்கும் பங்குனி மாதத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியே மீன்பிடிக் காலமாக விளங்குவதால் அவாகள் வாடைத் தொழிலே செய்து வருகின்றனர். இக் காலகட்டங்களில் நீர்கொழும்புச் சிங்கள மீனவாகள் இப்பகுதிகளை நாடிவருகின்றனர். இவர்கள் சவுத் பார் (SOUTH BAR) எனும் சிறிய துறையில் வாடிகள் அமைத்து இக் கடல் பகுதிகளில் மீன்பிடித் தொழிலைச் செய்கின்றனர். இச் சிங்களவர்கள் மீன்பிடித் தொழில் செய்வதற்கு ஏற்ற உதவிகளையும், வசதிகளையும் அரசு செய்கின்றது. இதனால் தொழிற் காலங்களில் இவர்களின் ஆதிக்கமே இப்பகுதிகளில் ஏற்படுவதால் இப்பகுதிகளில் தொழில் புரியும் பூர்வீக தமிழ்பேசும் மீனவர்களுக்கும் இவர்களுக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் நிகழ்வதுண்டு. இக் கடல்பகுதிகளில் தமிழ் பேசும் மீனவர்கள் கட்டுவலைகளை அவிழ்த்து விடுவது போன்ற சம்பவங்களினாலேயே மோதல்கள் ஏற்படுகின்றன. இந்நேரங்களிளெல்லாம் இராணுவத்தினர் அச் சிங்கள மீனவர்க்கு பக்கபலமாக நிற்பதை கண்கூடாகக் காணலாம். இதன் காரணமாக இம் மீன்பிடி காலகட்டங்களில் ''சவுத் பார்'' என்னும் இடத்தில் இராணுவத்தினர்ன் நடமாட்டம் அதிகமாயருக்கும். தற்பொழுது இப் பகுதியில் புத்தவிகாரை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இப்படி இவர்களது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் அடக்கு முறைகளையும் கடற்தொழிலிலும் நமது மக்கள் எதிர் நோக்கிய வண்ணமே இருக்கின்றனர்.

அடுத்து, ஏனைய கிராமங்களைப் பற்றிப் பார்ப்போம், திருக்கேதீஸ்வரம், மாந்தை, அடம்பன், பெரியமடு, பாலம் பிட்டி, பண்டிவிரிச்சான், முருங்கன், உயிலங்குளம், நானாட்டான், சூரிய கட்டைக்காடு, வேப்பங்குளம் பொற்கேணி, பொன் தீவு கண்டல், மறிச்சிக்கட்டி, குஞ்சுக் குளம், பறப்பான் கண்டல், வெள்ளாங்குளம், இலுப்பைக் கடவை, ஆண் காட்டி வெளி ஆகியன இம் மாவட்டத்துள் அமைந்துள்ள பெரிய கிராமங்களாகும். இப் பகுதிகளிலேயே பெரும்பான்மை வேளாண்மைச் செய்கை இடம்பெறுகின்றது. இப்பகுதியில் இருக்கும் 464 குளங்களில் பிரதான குளங்களாக கட்டுக்கரைக்குளம், வெளிமருதகுளம், அகத்தி முறிப்புக்குளம் வியாத்திக்குளம், கூரே குளம் ஆகியனஉள்ளன. இவற்றிலிருந்தே வாய்க்கால் மூலம் சிறு குளங்களுக்கு நீர் கிடைக்கின்றது. ஆனால் இவ்வளவு குளங்கள் இருந்தும் எதுவும் புனரமைக்கப்படாத நிலையிலேயே இருக்கின்றது.

இம் மாவட்டத்தில் முக்கிய இடமாக தலைமன்னார்த் துறைமுகமே விளங்குகின்றது. இங்கிருந்து இந்தியாவிற்கு கப்பல் போக்குவரத்

# உருமாற்றம் நிகழுமா?

துச் சேவை இருப்பதனால் உல்லாசப் பிரயாணிகள், யாத்திரீகர்கள் ஆகியோரின் நட்மாட்டம் நிறைந்ததாகவே உள்ளது. அத்துடன் திருக்கேதீஸ்வரம், மடு ஆகிய புனித தலங்களும் இருப்பதனால் அவ்வவ் காலங்களில் சலசலப்பு இன்னும் நிறைந்ததாகவே விளங்கும். போக்குவரத்து வண்டிகளும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து பிரயாணிகளாலும், யாத்திரீகர்களாலும் வியாபாரிகளாலும்வந்து போகின்றன. இவற்றைவிட பொருளாதார ரீதியிலான பெரும் தொழிற்சாலைகளோ அன்றி பெரிய கட்டிட நிர்மாணங்களோ காணக்கிடையாது. இப்பகுதிகளில் எவ்வளவோ பெரிய அளவிலான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கான வாய்ப்புக்கள் இருந்தும் அவைபற்றி கவனிக்கப்படாமல் இருப்பது மர்மந்தான். இருந்தும் 1972ம் ஆண்டளவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் பேசாலையில் எண்ணை அகழ்வு வேலைகளை சோவியத்யூனியன் மேற்கொண்டு பயனளிக்காமல் போனது யாவரும் அறிந்ததே, இன்றைய அரசின் உறவு நாடான அமெரிக்காவின் நிறுவனம் ஒன்று மேற்படி எண்ணை அகழ்வு வேலையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதை பத்திரிகை வாயிலாக அறிகின்றோம். அத்துடன் சீமெந்து உற்பத்திக்கான மண் முருங்கன் பகுதியில் பெருமளவில் கிடைக்கின்றது: சீமெந்துத் தொழிற்சாலைக்கு இங்கிருந்துதான் மண் எடுத்துச்செல்லப்படுகின்றது.

எனவே, இவ்வாறு மன்னார் மாவட்டத்தில் முக்கிய நான்கு மூலப் பொருட்கள் கிடைக்கின்றன.. அதாவது நெல், மீன், சீமெந்துமண், முத்துசிற்பி ஆகியன இங்கு பெருமளவில் கிடைத்தாலும் இங்கு வாழும் மக்கள் இன்றும் பின் தங்கிய நிலையில் வாழ்வதே வியப்பு.

## குடியேற்றவாதம்

எனவே ஒருபுறத்தில் பாரபட்சம் காட்டிவரும் அரசு அதேவேளையில் திட்டமிட்டுச் செயற்பட்டு வருவதை அவதானிக்கலாம். மடுக்கோவிலை அண்மித்துள்ள பகுதிகளில் தற்போது சிங்களக் குடியேற்றங்கள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதிகளில் புத்த விகாரை ஒன்றும் சிங்கள மத்திய மகாவித்தியாலயம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுடன் எரி பொருள் நிரப்பு நிலையமொன்றும் உள்ளது. இப் பகுதிக்கு இலங்கையின் பிரதமர் பிறேமதாச விஜயம் செய்து ''மாதா கிராமம்'' ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளார். இந்த விடயம் சேருவாவிலயை ஞாபகப்படுத்துகின்றது இந்தப்பகுதிகளில் அமைந்துள்ள வீதி ஏனைய பகுதிகளிலிருத்து மன்னாருக்குச் செல்லும் பிரதான வீதியாக இருப்பதனால் போக்குவரத்து வாகனங்கள் இவ்விடத்தில் தரித்து நின்றே புறப்படுகின்றன.

## 'இரத்தினம்'

அடுத்து இதே போல கொண்டச்சி என்னும் கிராமத்தையும் சற்று அவதானிப்போம். இக்கிராமப் பகுதியில் பெரும்பான்மையாக சிங்களவர்களே வாழ்கின்றனர், சுமார் 500 குடும்பங்கள் வரை இங்கு குடியேற்றப்பட்டுள்ளன. இவர்கள் மரமுந்திரிகைச் செய்கையையே மேற் கொண்டு வருகின்றனர். தற்போது 5,952 ஏக்கர்நி லப்பரப்பில் மரமுந்திரிகைப் பண்ணை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவர்களுக்குத் தேவையான சகல வசதிகளும் அரசினால் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இப் பகுதியில் ஆதிகாலந்தொட்டு வாழ்ந்து வரும் பழங் குடிகளான தமிழ் பேசும் மக்கள் தம் வாழ்வில் எவ்வித முன்னேற்றமோ அன்றி அற்ப வசதிகளைத் தானும் பெறாதவர்களாகவே உள்ளனர். இப்படி சிங்கள சோவனிச அரசின் இத் திட்டமிட்ட சதி மேலும் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றது: அதாவது புதிய சிங்களக் குடும்பங்களுக்கு தொண்டச்சி பகுதியிலிருந்து முருங்கனை நோக்கிய காட்டும் பகுதிகளை மரமுந்திரிகைச் செய்கைக்காக வழங்கும் அரசு அவர்களுக்கு சகல உதவிகளையும் அளித்து வருகின்றது. அத்துடன் நேரடி போக்குவரத்துச் சேவைகளையும் அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

1977ம் ஆண்டு ஆகஸ்ட் கலவரத்தில் பாதிக்கப்பட்டு அகதிகளாக ஓடி வந்த மக்கள் வவுனியா, மன்னார்ப் பகுதிகளில் குடியேறியதை நன்கறிவீர்கள். அம் மக்களில் சுமார் 30 குடும்பங்கள் வரை பரப்புக் கடந்தான் என்னும் பகுதியில் குடியேறிஇருந்தார்கள். இப் பகுதி மடுவுக்கும், வெள்ளாங்குளத்திற்கும் இடைப்பட்ட பகுதியாகும். அண்மையில் அரசினால் கொண்டுவரப்பட்ட பயங்கர வர்தத் தடைச் சட்டத்தை அடுத்து உருவாக்கப்பட்ட விசேட இராணுவ பிரிவிற்கு விசேட பயிற்சி அளிப்பதற்காக இப் பரப்புக் கடந்தான் பகுதியை தேர்ந்தெடுத்து அப் பகுதியில் வாழ்ந்த மக்களை அப்புறப்படுத்தினார்கள், இன்று அம் மக்களும் வாழ்ந்த பாடில்லை இராணுவத்தினரும் நிலை கொண்ட பாடார்யுமில்லை.

இன்று இம் மக்கள் பொருளாதார ரீதியிலோ அல்லது கல்வித் தரத்திலேயோ இன்னமும் வளர்க்கப்படாமல் இருப்பது மட்டுமல்லாமல் இன்று வரை மன்னார் பகுதிக்கு லக்சபான மின் நிலையத்திலிருந்து மின்சாரத் தொடர்பு எதுவும் இல்லை. ஆனால் பழுதடைந்த இயந்திரத்தையே (ஜெனரேட்டர்) குறிப்பிட்ட இடங்களுக்கு அதுவும் பட்டினத்தில் உபயோகிக்கின்றனர். அத்துடன் தார் போட்ட வீதிகளென பாதுகாப்பதற்கு இரண்டு பிரதான வீதிகளே நிர்வாகத்தால் நிர்வகிக்கப் படுகின்றது. இப்பாதைகள் கூட சிரழிந்து போன நிலையிலேயே கிடக்கின்றன.

இந் நிலைக்குக் காரணம் சமுதாயச் சீர்கேடே. இம் மக்களின் உழைப்பை உறிஞ்சி பெரிய தலைநகரங்களில் லட்சோப லட்சம் ரூபாய்களை அள்ளி வீசும் சுரண்டல் பேய்களினாலேயே இவ் இழிவு. நிலை அதைத் தகர்தெறிய தம் மக்களையும் ஏனைய மக்களுடன் இணைந்து விளிப்படையச் செய்யவேண்டியதே முதற் குறிக்கோள் அதுவே நமது ஆரம்பக் கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை எங்கே ........

(3ம் பக்க தொடர்ச்சி)

(இ) பொது நல சேவைகட்கு, மானியம் வழங்கல் போன்றவற்றிற்கு செலவிடும் பணத்தை முற்ருக நிறுத்தல், அல்லது குறைத்தல். உதாரணம்:- குழந்தைகட்கு வழங்கும் பால் மாவுக்கே மானியத்தை அரசாங்கம் நிறுத்தியதை மக்கள் அறிவர். இதில் 5ரூபா விற்ற 1ருத்தல் S. M. A. மானியம் நிறுத்தப்பட்ட பின்னர் 30ரூபாவாக விற்கப்படுவதும், பங்கீட்டு முறை நீக்கப்பட்டதும் நாமறிந்ததே:

(ஈ) தேசிய மயமாக்கும் கொள்கையை கடைப்பிடியாது விடல்.-இதுவே மிகப் பாரதூரமானதாகும். புதிதாக தேசிய மயமாக்கும் கொள்கை கடைப்பிடியாது விட்டால் பரவாயில்லை. இன்றைய அரசு ஏற்கெனவே தேசியமயமாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களை உதாரணமாக (இ. போ. ச) மீண்டும் தனியார் துறைக்கு ஒப்படைக்கச் சதி செய்வதும் யாவரும் அறிந்ததே. (தேசிய மயமாக்கல் என்பது தனியார் சொத்துக்களை பொதுத்துறைக்கு மாற்றுவதாகும்)

இவ்வாறு பார்க்குமிடத்து நவ குடியேற்றவாத மாயையில் இலங்கை சிக்கியிருப்பது எவர்க்கும் புரியும் வெளிநாட்டுக் கம்பெனிகள், எமது நாட்டைச் சுரண்டி கொள்ளை லாபம் அடையச் செய்வதற்கு ஏற்றபடி இலங்கை அரசு செயற்பட முனைகின்றது. நவகுடியேற்ற வாதத்தில் சிக்கிய நாடுகள் தமது சுதந்திரத்தையும் இறைமையையும் அந்நிய கம்பெனிகளிடம் அடகுவைத்து விடுகின்றன. ஸ்ரீலங்காவின் தர்மிஸ்ட சனுதிபதி அடிக்கடி தென் கொரியாவை உதாரணமாக காட்டுவார். இன்று தென்கொரியாவில் எதிர்க்கட்சிகள் தடைசெய்யப் பட்டுள்ளதுடன், இராணுவ ஆட்சியாளர் எதிர்க்கட்சி தலைவரான திரு. கிம்டேயுக்கு மரண தண்டனை விதித்துள்ளதையும் காணலாம். இவற்றிலிருந்து இலங்கை எங்கே போகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். பொதுவாக லத்தீன் அமெரிக்க நாடுகளே நவகுடியேற்ற வாதத்தில் பூரணமாக சிக்கி உள்ளன.

உதாரணமாக லத்தீன் அமெரிக்க நாடுகளான கௌத்தமலா, ஆர்ஜன்டீனு ஆகியவற்றைப்பார்க்கலாம். அங்கு இன்று நிலவுவதுநாளை இலங்கையிலும் நிகழலாம். அங்கு ஏற்பட்டுள்ள இராணுவ ஆட்சியில் மக்களின் எதிர்ப்பு இயக்கங்கள் தடைசெய்யப்பட்டு மனிதாபிமான மற்ற முறையிலே நசுக்கப்படுகின்றன. உள்நாட்டுப் போர் நடைபெறுகின்றது. கல்வி அறிவின்மையும், சுகாதாரக் கேடும், வருமான ஏற்றத்தாழ்வும் நிலவுகின்றது. இவையே நவகுடியேற்ற வாதத்தின் விளைவுகளாகும்.

இத்தகைய நிலையில் எமது கடமை தான் என்ன? ஸ்ரீலங்கா அரசின் ஓர் அங்கமாக ஈழம் இருக்கும் வரை இவ் இடர்ப்பாடுகளை நாமும் தாங்க வேண்டியுள்ளது. ஏற்கெனவே சிங்கள சோவனிச அரசின் கெடுபிடிகளால் அவதியுறும் எமது மக்கள் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டமிட்ட சுரண்டலினுல் தாக்கப்படுவதிலிருந்து காக்க புரட்சிப் பாதையில் வீறுநடைபோடல் அவசியம். காலம் தவறின் ''கண்ணிழந்த பின் சூரிய வணக்கம்'' செய்த கதையாகிவிடும் ஈழவர் வாழ்வு.


"தர்க்கீகம்"

சந்தா விபரம்

அரையாண்டுசந்தா ( ,, ,, ) 9-00

ஓராண்டு சந்தா ( ,, ,, ) 18-00

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர், "தர்க்கீகம்"

அஞ்சல் பெட்டி எண்-103,

யாழ்ப்பாணம்.

சந்தாவிற்கான பணம் - காசுக் கட்டளையாகவோ (Money Order) அஞ்சல் கட்டளையாகவோ (Postal Order) அனுப்பிவைக்கலாம்.


# இந்தியா-துண்டாடப்படுமா?

# அசாம் - எழுப்பும் கேள்வி

இந்தியாவின் வடகிழக்கே அமைந்திருக்கும் அசாம் மாநிலம் தொடர்ந்தும் கொந்தளித்த வண்ணமே உள்ளது. இங்கே எழுந்துள்ள கொந்தளிப்புக்களை ஊன்றிக் கவனிக்கும் போது கீழ்வரும் கோரிக்கைகளை அவர்கள் முன்நிறுத்துகின்றனர்;

1) வெளிநாட்டவரைக் கண்டுபிடித்து வெளியேற்றுதல்.

2) வாக்காளர் பட்டியலில் அந்நியர்களின் பெயர் சேர்க்கப்படுவதைத் தடுத்தல்.

3) வாக்காளருக்கு புகைப்படம் ஒட்டப்பட்ட அடையாளச் சீட்டு வழங்கல்.

4) ஊடுருவலைத் தடுப்பதற்காக எல்லைகளைக் காத்தல்

போன்றவை முக்கியமானவை. ஆரம்பத்தில் இவையே கோரிக்கையாக இருந்தாலும் இன்று அவற்றில் மாற்றம் காணக்கூடியதாக உள்ளது;

1973ல் பங்களாதேஷ் போராட்டத்தின்போது ஒரு கோடி மக்கள் அகதிகளாக இந்தியாவிற்கு ஓடிவந்தவர்களை பராமரிக்கும் பொறுப்பினை இராஜதந்திர அடிப்படையில் இந்தியா ஏற்றுக்கொண்டது. இவர்கள் அசாம் திரிபுரா, மணிப்பூர் போன்ற மாநிலங்களில் குடியேற்றப்பட்டு இந்தியா குடிமக்களாக ஏற்றுக்கொள்ளப் பட்டனர்; இதனுல் அம்மக்கள் அதிகளவில் நகரத் தொடங்கியதில் 1970 - 80ம் ஆண்டுகளின் சராசரி குடித் தொகை அதிகரிப்பு மற்றைய மாநிலங்களில் 18% இருக்கும்போது அசாமில் 32 5% அதிகரித்தது; இதனுல் அசாமில் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளைத் தோற்றுவித்தது: அங்கு வாழும் 1 கோடியே 89 லட்சம் மக்களில் 50 இலட்சத்திற்குமேல் வெளிநாட்டினர் வாழ்கின்றனர். இந்த வெளிநாட்டவர்கள் இன அமைப்பில் மங்கோலிய இன வகையைச் சேர்ந்தவர்களாகவும், கலாச்சாரத்திலும் மாறுபட்டவர்களாகவே காணப்படுகின்றனர்;

அசாம் தனது பிரதான உற்பத்தியாக ஆண்டுக்கு 840 கோடி ரூபா பெறுமானமுள்ள மசகு எண்ணெயையும், 400 கோடி ரூபா பெறுமானமுள்ள தேயிலையையும் உற்பத்தி செய்தாலும் 22 கோடி ரூபாவே அசாமுக்குக் கிடைப்பதால் அம்மக்களை சிந்திக்கத் தூண்டியது. ''கிழக்கத்தைய மக்களின் அமைப்பு'' (Eastern-Peoples Fourm) என்னும் அசாம் மாநிலக் கட்சியின் தலைவர் சைட்நிபாரன் போரா (Said Nibaran Bora) வின் ''அசாமின் வளத்தை இந்தியா பல ஆண்டுகளாக சுரண்டி வருகின்றது'' எனும் அவரது கூற்றை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்;

எனவே வெகுகாலமாக நீறுபூத்த தணலாக இப்பிரச்சனை இருந்து வந்தாலும் 1970ம் ஆண்டு இந்திய பாராளுமன்றத்திற்கான தேர்தல் பட்டியல் தயாரிக்கப்பட்டபோதே தீ மூளத் தொடங்கியது. ''மங்கோல்டாய்'' என்னும் பாராளுமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலில் ஏறத்தாழ 46,000 அந்நியர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அங்குள்ள மாநிலக் கட்சியான ''அசாம் தேசியக் கட்சி'', கிழக்கத்தைய மக்கள் அமைப்பு ஆகியவற்ருல் மக்கள் அரங்கிற்கு கொண்டு வரப்பட்டன. இதனுல் மக்கள் அங்கு கொந்தளிக்க தொடங்கினர்; மாணவர் அமைப்பான ''அனைத்து அசாம் மாணவர் மன்றம்'' (ALL ASSAM STUDENS' UNION) போராட்டத்தின் முதல் அணியாகத் திகழ்ந்தது. இதனுடன் ''சங்காரக் பநீஷ்சத்'' என்னும் மாணவர் அமைப்பும் இணைந்து கொண்டது. இவை கடந்த பாராளுமன்றத் தேர்தலை நடாத்தவிடாமல் தடுத்தலில் முக்கிய பங்கேற்றன. இம் மாணவ அமைப்புக்களுக்கு எதிராக ''அசாம் சிறுபான்மை மாணவ மன்றத்தினர்'' ஊர்வலங்கள் நடாத்தியதன் விளைவாக மோதல்களும், உயிரிழப்புக்களும் நிகழ்ந்தன;

எனவே இப்பிரச்சனை தீர எத்தனையோ வழி முறைகள் கையாளப்பட்டாலும் அங்கு கொந்தளிப்பு நிலைமை தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இப் போராட்டம் பற்றி தர்க்கீகமாக ஆராயும் போது இப் பிரச்சனை மக்கள் மத்தியில் இன்னும் ஆழமாக்கப்படவில்லை. கொள்கையும்-கோரிக்கையும் இணைந்த ஒரு நிலையான கோட்பாடு இவர்களால் இன்னமும் முன்வைக்கப்படாமல் வெறும் கூக்குரலால் கோரிக்கைகளையே அங்குள்ள இயக்கங்கள் முன்வைக்கின்றன; அத்துடன் சரியான அணியும் கட்டப்படவுமில்லை. ஆனுல் வெளிச்சக்திகள் தமது கைங்கரியத்தை இப் பிரச்சனையிலும் செயல் படுத்த தவறவில்லை. இதனுலேயே தங்கள் அதி தீவிரத் தன்மையை காட்ட முற்படுகிருர்களே தவிர போராட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை. இதனுல் போராட்டம் ஏற்ற இறக்கம் கொண்டதாய் அலைக்கழிந்தவண்ணம் இருப்பதால் தீர்வும் இழுத்தடிக்கப்படுகின்றன.

## சைப்பிரசில் துருக்கியர்......

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பாடங்களிலிருந்து சரியான வழியினைக் கற்றுக்கொண்டு, சைப்பிரசில் விடப்பட்ட தவறுகளை தவிர்த்துக் கொள்வார்கள் என நான் நம்புகிறேன். அந்த அனுபவங்கள் வழிகாட்டியாகவும் அறிவுறுத்தல்களாகவும் அமைகின்றன. இந்த அனுபவம் ஒரு தீவின் உரிமையாளர்களாக இருந்த ஒரு சமூகம்; வேண்டப்படாத விரும்பப்படாத ஒதுக்கப்பட்ட சமூகமாக மாற்றப்பட்டதற்கெதிரான போராட்டமாகும். போதும் போதும் என்ற அளவுக்கு பாதிக்கப்பட்டு தம்கையே தம்தலைவிதியை நிர்ணயிக்கட்டும் என்ற எண்ணதுடன் தம் வாழ்வினை நிலைநிறுத்திக் கொள்ள ஆயுதங்களை கைகளில் தாங்கிய மக்களின் அனுபவம் ஆகும். 1959ல் துருக்கியர்க்கு [illegible] மாதிரியான சூழ்ச்சி வலைகளில் தமிழினம் சிக்கிக் கொள்வதை முக்கியமாக தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதிகாரமும் பாதுகாப்பு மற்ற ஒரு சமூகத்தின் மீது இரக்கமற்ற ஒரு பெரும்பான்மை திட்டமிட்டு தனது கொடூரபலத்தைப் பிரயோகிக்கும்போது அதை தவிர்த்துக் கொள்வதற்கான எந்த வழிமுறைகளும் அந்த காகிதச் சட்டங்களில் இருக்கவில்லை; சைப்பிரசைப் பொறுத்தவரை துருக்கி இலங்கையைப் பொறுத்தவரை இந்தியா என்ற அதிகார பலம் பெற்ற நேசநாடுகளால் இந்தக் காகிதச் சரத்துக்கள் உத்தரவாதமளிக்கப்படுமானுல், பலவீனமான சமூகத்தை நசுக்குவதற்கான அந்த பெரும்பான்மையினரின் வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கும்;

தேர்ந்தெடுக்கப்படும் மாவட்டசபைகள், அதிகார பரவலாக்கல் என்பவை மூலம் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையேயுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வொன்றைப் பெறும் நோக்கமாக, ஜனுதிபதி ஜே. ஆர் ஜெயவர்தனுவால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு கொழும்பில் இயங்கத் தொடங்கியதை, சில நாட்களுக்கு முன் கார்டியன் பத்திரிகையில் வாசித்து மகிழ்ந்தேன். முன்னுள் பிரதம நீதிபதியைத் தலைவராகவும் சட்டத்தரணி கல்விமான்களான இரண்டு முஸ்லிம்களையும் மூன்று தமிழர்களையும் அங்கத்தவர்களாகவும் கொண்டு பெரும்பான்மையின் முடிவில் இயங்குவதாக அமையும் இவ்வாணைக்குழு நம்பிக்கையளிப்பதாகத் தெரிகிறது;

சைப்பிரசின் அண்மைக்கால மாற்றங்களை அறிந்து அவற்றின் மூலம் தமக்குத் தேவையான படிப்பினைகளைக் கற்றுக்கொள்வது ஆணைக்குழுவிற்கு மிகப்பயனளிக்குமென நம்புகிறேன்;

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ளம் போகுமா? கிளம் காணுமா?

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைப்பட்ட காலகட்டத்தில் கிளிநொச்சி, விசுவமடு, முத்தையன்கட்டு போன்ற பகுதிகளுக்குச் சென்று குடியேறினர். இதற்கு இன்னுமொரு காரணம் என்னவெனில் அன்றைய அரசின் வர்த்தகக் கொள்கையினுல் உள்ளூரில் உபஉணவு உற்பத்தி அதிகரித்திருந்தமையாகும்; மேலே கூறப்பட்ட கிளிநொச்சி, விசுவமடு, முத்தையன்கட்டு பகுதிகள் அநேகமாக உபஉணவு உற்பத்தியில் முன்னணி வகித்த பிரதேசங்களாகும். உபஉணவு உற்பத்தி அதிகரித்ததைத் தொடர்ந்து, கூலியாட்களும் பெருமளவில் தேவைப்பட்டனர், மலிந்த விலையிலும் உழைப்பை விற்கத்தயாராக இருந்த இம் மலையகத் தொழிலாளர்கள் நிரந்தர வருவாயினையும் குடியிருப்பு வசதிகளையும் கருத்திற் கொண்டு இப்பகுதிகளை நாடிக் குடியேறினர்.

அடுத்ததாக 1977ம் ஆண்டின் பின்பு அகஸ்ட் கலவரத்தையடுத்துக் குடியேறியவர்கள் காணப்படுகிறார்கள். 77 ஆகஸ்ட் இனக்கலவரம் காரணமாக-இருந்த இடங்களை விட்டு ஸ்ரீலங்காவிலிருந்து அகதிகளாக ஓடிவந்தோர் இருக்கிறார்கள். இவர்கள் இடம்பெயர்ந்த காலகட்டம் பதட்ட நிலைமையினைப் பின்னணியில் கொண்டிருந்தால் ஒக்ஸ்பாம், செடெக்போன்ற உலக நிறுவனங்கள் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், காந்தியம், சர்வோதயம் போன்ற இந்நாட்டு நிறுவனங்களினூடாகப் பல உதவிகளை வழங்கி அவர்களின் புனர்வாழ்வை இலகுவாக்கியது. இதனுல் இவர்கள் உடனடியாகவே காடுகளை அழிக்கவும், தமது வாழ்க்கையை அமைக்கவும் முடிந்தது.

இவ்வாறு பல கட்டங்களிலும் குடிபெயர்ந்து வாழத் தொடங்கிய மக்கள் பெருமளவில் இலங்கையின் வடபகுதியையே நாடினர். அதாவது 58ம் ஆண்டு காலகட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களில் அநேகர் வவுனியாப் பகுதிகளில் குடியேறினர். பின்பு 73-77காலகட்டத்தில் குடிபெயர்ந்தோர் அநேகர் கிளிநொச்சி போன்று யாழ்ப்பாணப் பகுதிகளுக்கும் விசுவமடு, முத்தையன்கட்டு போன்று முல்லைததீவுப் பகுதிகளிலும் குடியேறினர். 77ம ஆண்டுக் கலவரகாலத்தில் இடம்பெயர்ந்தோரும் பெருமளவில் வடக்கை நாடியுள்ளனர். இந்த நேரத்தில் திரு. கே. ஸி. நித்தியானந்தா அவர்கள் ஆற்றிய பணியினை ஈழவர் சமுதாயம் மறந்துவிடமுடியாது.

அதாவது மொத்தமாகக் குடியேறிய சுமார் 70,000 பேரும் பின்வரும் அட்டவணைப்படி பரந்து வாழ்கின்றனர்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 10,156 |
| முல்லைத்தீவு | 11,301 |
| வவுனியா | 20,750 |
| மன்னர் | 5,337 |
| மட்டக்களப்பு, திருமலை | 25,000 |

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற வடக்கு மாகாணப் பகுதிகளில் மொத்தமாக சுமார் 45,000 பேர் குடியேறியுள்ள அதேவேளையில் மட்டக்களப்பு, திருமலை போன்ற கிழக்கு மாகாண பகுதிகளில் 25,000 பேரே குடியேறியுள்ளனர். வடக்கே வளர்ச்சியடைந்து வருகின்ற முதலாளித்துவப் போக்கிற்கு தேவைப்படுகின்ற உழைப்புச்சக்தி இவர்களிடமிருந்து பெறப்படுகின்றது. மறுதலையாகச் சொன்னுல் மலையகத்திலிருந்து குடிபெயரும் இம் மக்கள் தமது உழைப்பை விற்பதற்கான பரந்த சந்தை வசதி, வடக்கே கிழக்கிலும் பார்க்கக் கூடுதலாக இருக்கிறது. இதில் வவுனியாவில் மட்டும் ஏறத்தாழ 3754 ஏக்கர் நிலத்தில் 2300 குடும்பங்கள் ஏறத்தாழ 10,000 பேர் குடியேறியுள்ளனர். ஆனுல் இதே நேரத்தில் வவுனியாவில் 77 ம் ஆண்டின் பின்புகாணிகொடுப்பதற்காக நடைபெற்ற 5411 காணிக் கச்சேரிகளினுல் 51,000 பேர் காணி பெற்றுக் கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இத்தகைய நிலைகளில். தமிழ்ப் பகுதிகள் எனக் கூறப்படுகின்ற இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களில் குடியேறியுள்ள மலையக மக்களின் வாழ்க்கை நிலைமைகள் தற்போது எப்படியிருக்கிறது என குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். முதலாவதாக குடியேறியுள்ள மலையக மக்கள் ஏறத்தாழ அனைவரும் கூலித் தொழிலாளிகள். இதனுல் தமது உழைப்பை விலை கொடுத்து வாங்கக்கூடிய முதலாளிகளை இவர்கள் சார்ந்து நிற்கவேண்டியதாகிறது, சிறுதொழில் செய்யக் கூடிய முதலோ (பணமோ) அல்லது சுயதொழில் புரியக் கூடிய நிலைமையோ இல்லாததால் தொடர்ந்தும் முதலாளித்துவத்தின் மூர்க்கப் பிடிக்குள் சிக்கி மீளாத அடிமைகளாய் வாழ்க்கை நடத்த வேண்டிய நிலை காணப்படுகிறது. இதனுல் முதலாளிகளுக்கும் நிலச் சொந்தக் காரர்களுக்கும் பயந்து வாழவேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது இதற்கு இராசேந்திர குளமும், கல்மடுவும் சாட்சி சொல்லும். இரண்டாவதாக தொழிற் போட்டி ஒன்று இவர்களது வருகையினுல் ஏற்படுத்தப்படுகிறது. உதாரணமாக மலையக மக்கள் குடியேறியுள்ள பிரதேசங்களிலும், அதன் சூழலிலும் மிகவும் மலிந்த விலையில் இவர்களது உழைப்பு பெறப்படுகிறது. இதனுல் அந்தப் பகுதியில் பூர்வீகக் குடிகள் தொழில் வாய்ப்பைப் பெற முடியாமலும், பெற்றுலும் கூலி உயர்வு கிடைக்காததாக அல்லற் படநேரிடுகிறது. மலையக மக்களோ கூலி உயர்வு கேட்குமிடத்தில் காடைத் தனங்கள் தலைதூக்குவதையும் எம்மால் அவதானிக்க முடிகிறது.

இலங்கையிலே எந்தப் பிரதேசத்திலாவது தண்ணீர் விலைக்கு வாங்குகிறார்கள் என்றுல் அநேகருக்குப் புதிராகஇருக்கும். ஆனுல் மட்டக்களப்பிலே செங்கலடி பதுளை வீதியில் ருகம் என்ற இடத்திற்கு அண்மித்ததாகக் குடியேறியிருக்கும் மலையக மக்கள் தண்ணீரைக் கூட விலைக்கு வாங்கிக் குடிக்கவேண்டிய அளவிற்குப் பயங்கரமாகச் சுரண்டப்படுகிறார்கள்,

பனையாலை விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல' என்று ஒரு பழமொழி உண்டு. அதேபோல சிங்கள ஆட்சியாளரின் சோவனிசப் போக்கினுல் கொடூரமாகத் தாக்கப்பட்டுவரும் எமது நாட்டிலே அதுவும் இந்த நிலையிலே சுரண்டலுக்கும், கொடுமைக்கும் ஆளாக்கப்படுகிறார்கள் என்பதைக் கேள்வியுறும் எந்த உள்ளமும் வேதனைப் படாமல் இருக்கமுடியாது.

கடந்த ஆட்சிக் காலத்திலே பொன் அணைஎனத் தமிழ் மக்கள் போற்றிய புனேயிலே, காடு திருத்திக் சழனியாக்கிய மலையகத்தவர்கள் நாடுகாக்கும் இராணுவ வீரர்களால் அடித்துத் துரத்தப்பட்டது அனைவருக்கும் நினைவில் இருக்கலாம்: ஆனுல் இன்று அதியுத்தமரின் ஆட்சியில் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில்ஸ்ரீலங்காவிலிருந்து அகதிகளாக வந்து குடியேறிய மலையகத்து மக்களை அத்துமீறிய குடியேற்றக்காரர்கள், என்று நாமஞ்சூட்டி அவர்கள் திருத்திய நிலங்களிலிருந்து வெளியேற்றப்படும் அபாயம் பச்சை முதலாளித்துவ அரசு காட்டும் சிவப்பு விளக்கு. சில இடங்களில் அரசாங்க அதிபர் காணிகளை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளதாகவும் அறிகிறோம். குறிப்பாக கல்குடாத் தொகுதியின் வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஆண்டான்குளம், கட்டுமுறிவு ஆகிய பகுதிகளில் குடியேறி இருந்த மலையக மக்களை அந்நிலத்தை விட்டு வெளியேறும்படி வாகரை உதவி அரசாங்க அதிபர் பணித்துள்ளாராம்.

இவ்வாறு எமது மக்கள் தமது சொந்த பூமிகளிலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடுக்கும் வலிமையோ அல்லது எதிர்க்கும் சக்தியோ பெற்றிராத அரசியல் விற்பன்னர்கள் ''82ல் தமிழீழம்' என்றும், ஐ. நா. வை அங்கீகரிக்கக் கோரியும் அமைதிப் பிரார்த்தனை நடாத்துவது விடுதலைப் போராட்டத்தையே கேலிக் குரியதாக்கும் செயலாகும். தமிழர் பெருங் கூட்டத்தைப் பாதுகாக்க இதோ தமிழர் பாதுகாப்புப் படை'' என முத்திரை குத்தும் வீரர்கள் அபாயத்தை எதிர்நோக்கும் எமது மக்களைப் பாதுகாக்க முனைவார்களா ?




மூன்றும் உலகப் போர் மூளுமா? என்னும் கேள்வியை எழுப்பி உலக மக்களை அச்சுறுத்திய வண்ணம் எண்பதாம் ஆண்டு தன் பயணத்தை முடித்துள்ளது. உலகின் ஒவ்வொரு திசையிலும் போர் எரிமலை குமுறிய வண்ணம் காட்சியளிக்கின்றன. அமெரிக்க ஜனுதிபதி தெரிவும், அவரது சிறு பிள்ளைத் தனமான வாய் வீச்சுக்களும், மத்திய கிழக்கில் ஈரானும்-ஈராக்கும், சிரியாவும்- ஜோர்தானும், பாலஸ்தீனமும் - சியோனிஸ்ட்டுக்களும் ஆகிய வற்றுக்கிடையேயான மோதல்களும், படைகுவிப்புக்களும், ஐரோப்பாவில் தொழிலாளர் உரிமைக் கோரிக்கையை திசை திருப்பி சமவுடமைக் கொள்கைக்கே வெடி வைக்கலாம் என்னும் ஏகாதிபத்திய முயற்சிகள்நம் பாசைகள், பாகிஸ்தானுக்கு ஏகாதிபத்தியங்கள் ஆயுத விற்பனை- கோடி கோடியாக கடன், அத்துடன் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் மூலம் ஆத்திரமூட்டும் தூண்டுதல்கள், தென்னுபிரிக்காவில் வெள்ளை நிற வெறியர்களின் எக்காளம் இன்னும் இன்னும் தொடரும் குமுறல்களினூடே எண்பத்தி ஒராம் ஆண்டு தவழத் தொடங்கியுள்ளது.

இதே வேளையில் உலகை மூடியிருக்கும் முதலாளித்துவ ஏகாதிபத்திய கூரை முகடுகளை உலுப்பி தகர்க்கும் புரட்சிகர பாட்டாளிவர்க்க சக்தியினுல், நிக்கரகுவா, சிம்பாவ்பேயை தொடர்ந்து, எல்சல்வடோர் மக்கள் நடாத்தும் வீரம் செறிந்த போராட்டம், ஏகாதிபத்தியங்களை கிலி கொள்ளச் செய்துள்ளது. நமக்கும் உத் வேகத்தைத் தருகின்றது. அம் மக்களின் உண்மையான சித்தாந்தமும் அவர்களது போராட்டமும் எவ்வளவு தூரத்திற்கு சக்தி வாய்ந்தது என்பதனை நிதர்சனமாக காண்கின்றோம். அண்மையில் எல்சல்வடோர் மக்கள் போராட்ட இயக்கத்தின் உயர் தலைவர்கள் அறுவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் எமக்குத் துயரத்தைத் தந்தாலும் அம் மக்களின் விடுதலைப் போராட்டத்தை இன்னும் வீறுப்புக் கொள்ள வைத்தமை விடுதலைப் பாதையின் தன்மையை எமக்குமட்டுமல்ல உலக புரட்சிகர பாட்டாளி வர்க்கச் சக்திகளுக்கு மேலும் உணர்த்தியுள்ளது

ஸ்ரீலங்காவில் அண்மையில் நடந்து முடிந்த நாடகக் காட்சிகள் எமது மனக்கண்முன்னே மீண்டும் மீண்டும் நிறுத்துகின்றது வேலை நிறுத்தத்தை முறியடிக்க கையாண்ட வழிமுறையும், முன்னுள் பிரதமர் ஸ்ரீமாவின் குடியுரிமை பறிப்பும்' கலவானை தொகுதியில் முடிச்சுப்போட்டு அவிழ்ந்தவிதமும், உருக்குக் கூட்டுத்தாபன தலைவர் பாரளுமன்றத்திற்கு வெளியே இழைத்த தவறுக்கு பாரளுமன்றமூலமே தண்டனை வழங்க வைத்ததும், சபாநாயகருக்கு எதிரான எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சிகளின் மறுப்பினுள்ளே அதனை விவாதத்திற்கு எடுத்தும்-அதனை தோற்கடித்ததும் இவையும்-இன்னும் பலவும் எதிர்கால நாடகத்தின் ஒத்திகைகளே. இவற்றுக்கெல்லாம் நல்ல பாடம் பாட்டாளிவர்க்கத்தின் புரட்சியினுல் எனிவரும் ஆண்டுகளின் கிடைக்கும் என்றே தர்க்கிகம் நம்புகின்றது.

அடகுவைப்பும்-சரணடைவும், வர்க்கங்களின் ஒன்றிணைவும் ஆகிய நிகழ்வுகளை ஈழவர் வாழ்விலும்-ஸ்ரீலங்காவின் போக்கிலும் தெட்டத்தெளிவான சுவடுகளாக எண்பதாம் ஆண்டு பதித்துச் சென்றுள்ளது. இச்சுவடுகள் மக்களின் நினைவுகளில் ஆழமாகவே பதியப்பட்டுவிட்டன

ஈழவர்களின் போராட்ட முனைப்பு, கொள்கையும், கோரிக்கையும் இணைந்த புரட்சிகர பாதையை நோக்கி உந்திச்செல்லத் தொடங்கி விட்டது. கருத்து மக்களைப்பற்றி சுழன்றடிக்கும் புயலாய்-குமுறும் எரிமலையாய் வெடிக்கும் நிலைத்தோற்றத்தினை உருவாக்கியுள்ளது. எண்பத்தொன்றில் மேலும்மேலும் புரட்சிகர பாதையில் முன்னேறிச்செல்ல ஈழவரின் விடிவுக்காய் ''தர்க்கிகம்'' தன்னையும் பங்காளியாய் இணைத்துக் கொள்ளும்.

இப்பத்திரிகை ஊரெழு கிழக்கு எஸ். விக்னேஸ்வரன் அவர்களால் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 226ம் இலக்க இடத்திலுள்ள ஆனந்தா அச்சகத்தில் அச்சிடுவித்து வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவர் நாள் சிறப்பு மலர்

## உழவர் விழா - வரலாற்றுப் பார்வை

உழைப்பிற்கு மதிப்பளிக்க- பொங்கல் விழாவெனக் கொண்டாடப்படும் உழவர் விழாவினை, நம்மக்கள் நன்குணர்ந்து கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. -உழைப்பின் விழா சமய விழாவாக பரிணமித்து- தமிழ் பேசும் நம்மக்களில் ஒரு சமயப் பிரிவினரே கொண்டாடுவதனுல் இதன் வரலாற்றுப் பின்னணியை உற்று நோக்கவேண்டியது ஈழவரின் கடமையாகும். அப்போதுதான் ஈழவரின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் வெற்றுப் பேச்சாக்காமல் நிதர்சனமாக்க முடியும். இதனைக் கருத்தில் கொண்டே ''தர்க்கிகம்'' தனது சிறப்பு மலரில் இவ்வாய்வினை வெளியிடுகின்றது.

### சமயங்களின் தோற்றம்:

நாகரிகம் வளராத ஆதிகால மனிதன் - தன் சூழலை இயற்கையை புரிந்து கொள்ள முடியாதவனுகவே இருந்தான், எல்லாமே அவனுக்கு புதிராகவே இருந்தன. இயற்கையின் செயற்பாடுகளைக் கண்டு அவன் அஞ்சினுன். இடியும் - மின்னலும் -புயலும் - மழையும், பூகம்பமும் - பூமியதிர்வும், ஏன் தன் அறிவுக்கும் - ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட அனைத்துமே - அவனது வழிபாட்டுக்கு உரியதாய் இருந்தது. சூரியனின் - சக்தி - செயற்பாடுகள் பல விளைவுகளுக்கு பொறுப்பு என்பதனை வளர்ச்சியடைந்த அறிவு அவனுக்குப் புலப்படுத்தியது. அதனுல் தன் வழிபாட்டில் சூரிய வணக்கத்தை முதன்மையாய் கொண்டான்- மனித வரலாற்றில் இவ்வழிபாட்டின் தாக்கத்தை- பரவலாக - ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பரக்க காணலாம். சமயம் - மனிதனிடம் இப்படித்தான் தோன்றியது- வளர்ந்தது. ஆதிக்கம்செலுத்தியது.

### சமுதாய வளர்ச்சி

சமய வளர்ச்சியும் - சமுதாய வளர்ச்சியின் பின்னணியுடனேயே வளர்ந்தது. கூட்டம் கூட்டமாக சேர்ந்து வாழ்ந்த மனிதன் கிடைப்பதை உண்டான் - உணவு கிடைத்தபோதெல்லாம் மகிழ்ச்சிக் கூத்தாடினுன். அனைத்தும் பொதுவாகவே இருந்தன. கற்களால் ஆன கருவிகளே அவனது ஆயுதங்கள் - குகைகளே அவனது வதிவிடங்கள் - இயற்கை அவனுக்கு அறிவையூட்டியது அனுபவம் - ஆற்றலை வளர்த்தது. இந் நிலையிலேயே- பழக்கவும் - பழக்கிய பின்பு வளர்க்கவும் கூடிய மிருகங்களை அவன் கண்டுகொண்டான். ஆடு - மாடுகள் அவனது பிரதான கால்நடை வளர்ப்புகளாகின. அவற்றின் உணவு தேடி புல்வெளிகளை நாடினுன்- ஆற்றோரம் தேவைப்பட்டது. இவன் நாடோடியானுன்.

கால்நடை வளர்ப்போர் மக்கள் கூட்டங்களில் இருந்து பிரிந்து சென்றனர். கூட்டங்கள் மெதுவாக உடையத் தொடங்கின. இயற்கை மேலும் மேலும் கற்றுக் கொடுத்தது காட்டில் அலைந்து திரிந்து வேட்டையாடியும்- காய்கனிபறித்தும் உண்டவன் தனக்கு பக்கத்தில் அவற்றை உண்டாக்க முடியும் எனக் கண்டான்-விவசாயம் புகுந்து கொண்டது. தனதுபயிர் நிலங்களுக்கு பக்கத்திலேயே அவன் நிரந்தரமாக தங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. குடில் அமைக்கக் கற்றுக்கொண்டான். கருவிகள் செய்தான் - நிலத்தை பண்படுத்தினுன் - மேலும் மேலும் அந்நிலத்திலேயே பயிரிட்டான். பயன் கிடைத்தது. இதுவே அவனது பழக்கமானது.

சமூக வளர்ச்சியும் வழிபாடும் வாழ்க்கையுடன் இணையத் தொடங்கியது. கால்நடைகள் செல்வங்களாயின, தனிச் சொத்தாக கணிக்கத் தொடங்கினர்- பயிர்ச்செய்கையும் வளர்ச்சியடைந்தது. பண்டமாற்று முறை புகுந்துகொண்டது. நிலம் பங்கிடப்பட்டது- சிலர் சொத்துடையவராயினர். வர்க்கங்கள் உருவாகத் தொடங்கின, சமுதாயம் முரண்பட்ட இரு அணிகளாக பிளவுபடத் தொடங்கியது.

இப் பின்னணியிலேயே உழைப்புக்கு விழா உருவானதை நாம் கவனத்தில்கொள்ளல் வேண்டும்.

### உழவர் விழா சமய விழாவாக உருமாறல்


பயிர்ச் செய்கையில் அறுவடை செய்யப்படும்போது - உழைத்தவர்கள் மகிழ்ச்சியால் கூத்திட்டனர். முதல் நெல்லு அறுவடை செய்து பொங்கி பங்கிட்டு உண்டனர். ஆனுல் உருவாக்கியவை எல்லாம் உழைத்தவனுக்கு சேருவதில்லையே! அவை ஒரு சிலரின் கைகளுக்குள்ளேயே மடக்கப்பட்டன. உழைப்பவனுக்கு காரணம் கற்பிக்கத் தொடங்கினுன். உன் உழைப்பினுல் இது உருவாகவில்லை. வேறு ஒரு சக்தி - ஆண்டவன் தான் இவற்றை படைத்தான். உருவாகும் அனைத்துமே அவனுக்குத்தான் சொந்தம்-நான் அவனிடமே சேர்ப்பிக்கின்றேன் என்றெல்லாம்- அந்த ஒருசிலர் உழைப்பை இழிவாக்கி அதன் உயர்வை மறைத்து உழைப்பவனின் சிந்தனையை வேறு திசைக்கு மாற்றி விட்டனர். பயிருக்கு சூரிய சக்தி அவசியம் என்பதை உணர்ந்து- அதற்கு மதிப்பளித்ததை - சாமிக்கு படையென்றனர் ஒரு சிலர் சூரியனை இயக்குபவன் அவன் தான் என கற்பித்தனர். இதனுல் உழவர் விழா சமய விழாவாக உருமாறத் தொடங்கியது.

இந்துக்கள், சைவர்களின் ''சாமிக்கு படைத்தல்'' என்னும் சடங்கு நிகழ்ச்சி- அறுவடை செய்து பொங்கி உண்டு களித்தலை- சாமிக்கு படைத்து உண்ணுதல் என்னும் சடங்காக மாற்றப்பட்டது.

அரசுகள் தோன்றி- நாகரிகம் வளர்ச்சியடைந்து- நாடுகளை அடிமைப்படுத்தல் என்னும் நிலையேற்பட்டது. வல்லரசுகளாக விளங்கியவை தமது மதங்களை கைப்பற்றிய நாடுகளில் புகுத்தினர். தமிழ் பேசுவோர் மத்தியிலும் இந் நிகழ்ச்சி நடைபெற்றது. ஒவ்வொரு பிரிவினர் சமுதாய நிலைக்கேற்ப மதக் கொள்கைகளை தழுவத் தொடங்கினர். அவர்கள் அம்மதங்களுடன் இறக்குமதிசெய்யப்பட்ட கலாச்சாரத்திற்கும் உட்பட்டனர். ஆதலால்- ஒரு மொழி பேசுவோர் மத்தியில் பிரிவினை வளர்ந்தது- பாரம்பரிய கலாச்சாரங்கள். பண்பாடுகள் மறுக்கப்பட்டன. அவற்றை மதச்சடங்குகள் என ஒதுக்கினர். உழவர்விழா தனியே ஒரு மதத்தினருக்கான தாக்கப்பட்டது.

ஆதலால் பொங்கல் விழாவினை ஒருமதத்தினருக்கான சடங்குகள் என ஒதுக்காமல் உழைப்புக்கும், ஆற்றலுக்கும், மதிப்பளிக்கும் நாளாக, விழாவாக தமிழ் பேசும் அனைவரும் கடைப்பிடித்தல் வேண்டும் என்றே ''தர்க்கிகம்'', அறிவுறுத்துகின்றது.

ஈழத்தில் ஏற்படப் போகும் சமதத்துவ, சமதர்ம, சமுதாய ஆட்சியை உருவாக்க, உழவர் விழவினை- மக்களின் விழாவாக, உழைப்பவன் விழாவாக இப்பொழுதிருந்தே ஈழவர் கொண்டாடுதல் வேண்டும்.



## உழவர் விழாவும் ஈழவர் வாழ்வும்

சேற்றிலே உழவன் கால்கள் புதையாவிட்டால் சோற்றிலே கைபுதைவது என்பது சாத்தியமற்றதாகிவிடும். நித்தமும் நாம் சோற்றிலே கை புதைக்கிருேம் என்பதனுல், சேற்றிலே கால் புதைக்கும் உழவர்களின் வாழ்வையும், சேவையையும் ஒரு நாளாவது நினைவுகூர்ந்து நன்றி கூற விழா எடுத்தல் பொருத்தமானதல்லவா? உழவர்களின் இந்த விழாவுக்கும், ஈழவர்களின் வாழ்க்கைப் போராட்டத்துக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைப் பார்ப்போம்.

ஏரின் ஓட்டங்கள் இல்லையென்ருல் ... ... ..., ஏர் மண்ணைக் கிளறி ஓடவில்லையானுல், நெல்லின் வேர்கள் மண்ணினுள் ஊடுருவி வளரவில்லையானுல் நெல்மணிகளை அறுவடை செய்திட முடியுமா? எம் வாழ்வின் அனைத்து ஓட்டங்களுக்கும் அடிப்படையானதும், முதன்மையானதும் ஏரின் ஓட்டமல்லவா? எனவே தான் ஏராளும் உழவர்களுக்காக இவ் விழா எடுக்கப்படுகிறது. ஏராளும் உழவர்களும் நாளை பாராளும் நிலையைப் படைக்க உழவர் விழா உதவட்டும், அனைத்து உயிர்களுக்கும் உணவு வழங்கும் உழவுத் தொழில் சிறப்புக்குரிய தொன்ருகும். அதனுலேதான் புதுயுகக் கவிஞன் பாரதியும் ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' எனப் பாடினுன். உழவர்களினதும், தொழிலாளர்களினதும் உழைப்பினுலும், இயக்கத்தினுலுமேதான் உலகம் இயங்குகின்றதென்னும் உண்மையை உணர்த்தும் பாரதி ''விண்ணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்'' என்ற அடிகளால் ஒரு வர்க்கப் போராட்டத்திற்கல்லவா அறை கூவுகின்ருன்.

இவ்வாருகச் சிறப்பித்து பேசப்படுவதும், பெருமை மிக்கதுமான உழவுத் தொழிலை செய்த, செய்கின்ற ஈழவர்கள் தம் வாழ்க்கையே ஒரு போராட்டகளமாக அல்லவா அமைந்து விட்டது. அல்லையிலும், கந்தளாயிலும் புகுந்துகொண்ட அந்நியர்களால் வயல் நிலங்கள் சூறையாடப்பட்டன. தொடர்ந்து வந்த இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு, பயத்தாலும் பீதியினுலும் தமது நிலங்களை விட்டுவிட்டு ஓட்டமெடுக்க வேண்டியதாயிற்று. நீலாப்பளை என்னும் கிராமம் நிலாபொலவாகியது. புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது ஈழவர் பூமி.

வெருகல்- கிளிவெட்டி பால வேலைகளை முடிக்க வக்கற்ற அரசினர், அல்லை- கந்தளாய் பாலத்தை முடித்து வெள்ளம் வருவது போல அந்நியர் வர இடமளித்தது அப்பகுதி உழவ [illegible] அம்பாறை மண்ணிலே, தம் வாழ்வை அமைத்திருந்த ஈழத்து உழவர்களை அவர்கள் மண்ணிலேயே சிறுபான்மையினராக்கி, சிங்களத்தைப் புகுத்தியது ஸ்ரீலங்காவின் சோவனிசம். இந்த வேதனையான நிலைகளில் கூட ஆளும் வர்க்கங்கள் அவர்களின்பால் தம் கவனத்தைத் திருபபவோ, வேதனையைத தீர்க்கக் கூடிய வழி வகைகளைக் காணவோ முற்படாதது ஆச்சரியமான விடயமல்ல,

''உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர்'' என மார்தட்டிய ஈழவர்கள் தொழுதுண்டு பின் செல்லும் வெள்ளைக் கொலர் (WHITE-COLOR) வேலையைத தேடி புறப்படவும் வேண்டியதாயிற்று. ''உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக்கண்டீர் பழுதுண்டு வேருேர் பணிக்கு'' எனப்பாடும் வள்ளுவன் உழத் தொழில் சிறப்பாக நடக்கு மிடத்து பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதலை வலியுறுத்துகிருன், ''பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல் யேலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' எனக் கூறுகிருன், அதாவது உழுது நீ மட்டும் வாழ்வதோ- சேமித்து வைப்பதோ போதாது. அதனைப் பகுத்து- சமூகத்திற்கு வழங்குதலே சிறந்தது எனக் கூறி சோசலிச சமுதாயம் ஒன்றிற்கான அடித்தளத்தை இடுகிருன்,

''மேழி பிடிக்கும் கை செங்கோலோச்சும் கை'' என்ற முன்னேர் வாக்குக் கிணங்கக் கூடியதாக ஏர் தாங்கி உழைக்கின்ற கரங்கள்- கல்வார்த்துக் கத்தி ஏந்தி மலைகளில் உழைக்கின்ற கரங்கள்- தொழிற் சாலைகளிலே சம்மட்டி ஏந்தி உழைப்பை விற்றுப் பிழைப்பு நடத்தும் அந்தக் கரங்கள் விழித்துக் கொண்டால் மட்டுமே நாட்டில் செங்கோல் நீதி தவருது ஆட்சி செலுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து முத்துகளைப் பற்றிக் கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்

சிறுகதை

# உழவர் விடிவு...?



## 1

அது ஒரு வயற் பகுதி அறுவடைக்காலம் முடிந்திருந்தது. நிலம் வரண்டுபோய் இருந்தது.

அப்பகுதியில் ஆங்காங்கே தொட்டுத் தொட்டுக் குடிசைகள் தெரிந்தன. குடிசை வாசிகள் வயல் வேலை செய்பவர்கள். பார்வை பளிச்சிடும் வகையில் அப்பகுதியில் ஒரு கல் வீடு. அதன் சொந்தக்காரனே வயற் சொந்தக்காரன்.

சிதறி இருந்த சில குடிசைகளில் ஒன்றிலேயே அக்குடும்பம் குடியிருக்கிறது. மழையாயின் சில மழைத்துளிகளும் வெய்யிலாயின் சில ஒளிக் கதிர்களும் குடிசையுள் தடுப்பின்றி நுழையும். அது சிறிய குடிசைதான் ஆனல் இவருக்கு உரியதாய் இருந்தது.

குடிசைக்கருகில் இருந்த கோவிலின் வெண்சுவர் மெதுவாக ஒளிபெறத் தொடங்கியது. இன்னமும் விடியவில்லை. ஆனல் விடிவதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

இரவு முழுவதும் குழப்பிய மனத்தோடு குறை நித்திரையில் புரண்ட அவன் எழும்பத் தீர்மானித்தான். எழுந்தான். பண்சுவாயேல கையை வைத்துத் துளாவினன். அவன் தேடியது அகப்பட்டது. தீப்பெட்டியை எடுத்து, திறந்து, குச்சி எடுத்து, ஓரங்களில தட்டினன்; பல தட்டல்களின்பின் சிறிக்கொண்டு ஒளி வந்தது. ஒளிக்குச்சியை மூலையில பதுங்கி இருந்த குப்பி விளக்கில் முட்டச் செய்தான். ஒளி தொற்றிக் கொண்டது. குப்பி கூசிக்கூசி எரிந்தது. இடைவெளியை இருளைப் போக்கப் போராடியது.

அவன் திரும்பிப் பார்த்தான் மனைவியும், பிள்ளைகளும் நலத்தல் நித்திரையில் இருந்தார்கள். தத்தமக்குக் கிடைக்கக்கூடிய துணிகளைக் கொண்டு உடலைப் போர்த்தி இருந்தார்கள்.

அவன் குடிசைக்கு வெளியே போனன.

※

அந்தப் பகுதி வயல் முழுவதும ஒருவனுக்கே சொந்தமானது. அவனை அங்கு போடியார் என அழைப்பர். வயல் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பாகமும் நெற் செய்கைக்காக ஒவ்வொரு குடும்பங்களிடமும கொடுக்கப்பட்டிருக்கும. குடிசை வாசிகளே அதற்றில் உழுவது முதல் அறுவடைவரை பாடுபடுவர். அவர்கள் விதைத்து அறுத்ததில் பெரும் பங்கை போடியாரிற்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். மீதியே குடிசை வாசிகளைச் சேரும். அறுவடைக் காலங்களில் மட்டுமே. அவர்களுக்கு குறிப்பிடத்தக்களவு வருமானம் வருவதுண்டு. அது அவர்களின் பழைய கடன்களை நிரப்பவே போதாதிருக்கும்.

※

காலைக் கடன்களை முடிக்க குடிசைக்கு வெளியே போனவன் மீண்டும் குடிசையுள் நுழைந்தான்.

''போடியார்... விடிய வந்தா... காசு தாறனெண்டவர்... போகேலயோ?'' நித்திரையை விட்டெழுந்து, நிலத்தில் நிமிர்ந்திருந்தபடி மனைவி கேட்டாள்.

'ம்... அங்கதான் போப்போறன் '' பதிலுறுத்தியபடி அவன் குனிந்தான் குவிந்திருந்த துணிகளை விறுவிறென வெருக்கிக்கொண்டிருந்தான்; எதையோ தேடினன் 'நல்ல' சாரம் அவனுக்குக் கிடைத்துவிட்டது. அதை எடுத்து சுருக்கி மாலையாக்கி கழுத்தில் இட்டுக்கொண்டான. நல்ல சாரம் இடுப்பிற்கு வரவும் படுக்கைச் சாரம - கிழிந்த சாரம் - இடுப்பை விட்டகலவும் சரியாக இருந்தது. கிழிந்த சாரத்தை மூலையில் ஒதுக்கிவிட்டு நல்ல சாரத்தை உடுத்துக் கொண்டான். கையால் தலையைச் சரி செய்தான்.

மீண்டும் குடிசையை விட்டு வெளியேற முயன்ருன். குனிந்து போயும் குறுக்குத்தடி அவன் தலையில அடித்தது ''ச்... சனியன் ...விடியக் காலத்தாலேயே '' அவன நெற்றியைத் தடவியபடி திட்டினன்.

''என் அடிச்சிட்டுதே? நில்... தேயில கிடக்கு.. தண்ணி தாறன்..''- மனைவி அவன் அவள் கூற்றைக் கவனியாததுபோல் நடக்கத் தொடங்கினன்.

கோவிற் சுவர் மேலும் ஒளி பெற்றிருந்தது.

※

அவன் நாற்பது வயதுடையவன. பெயர் மாணிக்கம். குடித்தலையும், புகைத்தலையும் ஒதுக்கிவிட்டு குடும்பமே கண்ணெனக் கருதுபவன். கடவுள் பக்தமானும் கூட. அந்தக் கிராமத்தில் மாணிக்கம் சற்று வித்தியாசமானவன் தான. இருப்பினும் வறுமை ஓட்டிக்கொண்டே இருக்கிறது.

வயலில் அவனிலிருந்து கடைசி மகன்வரை உழைப்பது வழக்கம். இம்முறை அறுவடை காலத்தில் மாணிக்கத்தின் மூத்த மகனின் காலில் முறிவு ஏற்பட்டது. வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டான். இன்னமும் அவன் வைத்தியசாலையிலேயே இருக்கிருன்; மகனின் சுகத்திற்கு செலவழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பணம் ஏற்கனவே இருந்த வறுமையை விஸ்தரித்துக் கொண்டிருக்கிறது.

அண்மை நாட்களாக மாணிக்கத்திற்கு காலையில் எழும்புவதும் பிறரிடம் போவதும், கடன் கேட்பதுமே வேலையாக இருக்கிறது. ஏனைய குடிசை வாசிகளிடமும் இதேபோல் ஏதோ ஒரு வகையில் இல்லாமைதான் இருக்கும். அவர்களின் உதவிகள் இவனின் தேவைகளுக்கு ஈடானவைகள் அல்ல.

பணத்தை தேடியே போடியாரிடம் அவன் போய்க் கொண்டிருக்கிருன். மாணிக்கம் அங்கு போவது இதுதான் முதல்தடவையல்ல.

※

மாணிக்கம் வீட்டை அடைந்துவிட்டான் 'போடியார் !' அவன் தாழ்ந்த குரலில் வாசலில் நின்று கூப்பிட்டான்.

'முதேசியள்... விடியக் கிடேல வந்திடுங்கள்' போடியார் மனைவி வீட்டுக்குள் இருந்து புறுபுறுத்தாள்: வெளியே வந்தாள். அழுத்தமாகக் கேட்டாள்.

''என்ன? அவர் என்னம் எழும்பேல்ல''

### ''ஈழன்''

''விடிய என்...ன வரச்... சொன்னர். ஏழு மணிக்கு... ஆஸ்பத்திரிக்கு நான் போக வேண்டி...'' அவன் தழதழத்த குரலில் கூறி முடிக்குமுன் கூசிய கண்களோடும் எண்ணை படர்ந்த முகத்தோடும் தலையை கோதியபடி போடியார் வெளியே வந்தான்.

''காசு... இப்ப எடுக்கேலாது... நீ பின்னேரமா... வா... அப்பதான் வசதியா இருக்கும்''.

## 2

அன்று உழவர் நாள், வழமைபோலவே இம்முறையும் உழவர்கள் கடன்பட்டு விழா வைக்கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

வெய்யில் கடுமையாக இருந்தது. பாதையில் மாணிக்கம் நடந்து வந்து கொண்டிருந்தான். வெய்யிலின் தாக்கம் அவனிற்குத் தெரிந்தது. மகனுக்குக் கொடுக்க வேண்டியவற்றைக் கொடுத்துவிட்டு பெரும் பசியுடன் குடிசையை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

இம்முறையும் வழமைபோலவே குடிசையில் நடைபெற்றிருக்கக் கூடியபொங்கலை அவனுக்குத்தெரியும். இருப்பினும் ஏதாவது உண்ண இருக்கும்என்ற எண்ணத்துடன் அவன் வந்து கொண்டிருந்தான்.

நீ.. களைச்சுப்போய்த் தான்... வந்திருக்கிரா.. பிள்ளையள் பொங்கின புக்கைய முடிச்சுப் போட்டுது . அப்போத போடியார் விசயம் ஒண்டு சொல்லி அனுப்பினவர். அங்க போனு...'' மாணிக்கத்தின் மனைவி முடிக்குமுன்.. மாணிக்கம் படபடவென வார்த்தைகளை விழுங்கினன்,

குடும்பத்துப் பஞ்சம் பற்றிப் பேசிய வரை, அவனுக்குப் பசி தெரியவில்லை. பேச்சு ஓய்ந்ததும் மீண்டும் வயிறு எரிவெடுத்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. களை கண்களை மூட வைத்தது. 'பொங்கலண்டு கூட வீட்டில வழியில்லை '' என்றபடி அவன் போடியாரின் புக்கைக்காக நடந்தான்.

அது அவன் மாடு பூட்டி உழுத நிலம். மழையும் வெய்யிலும் பார்க்காது உழுது, நீர்தேக்கி, விதைத்து, களை பிடுங்கி, உரமிட்டு, கதிர் அறுத்து உழைத்ததை அவனல் எண்ணிப்பார்க்க முடியவில்லை. காரணம் கடும்பசி அனைத்தையும் மறைத்தது.

போடியார் வீட்டை அவன் ஒருவாறு அடைந்தான், அவனை எதிர் பார்த்திருந்தது போல் போடியார் மனைவி வீட்டின் வாசலிற்கு வந்தாள்;

''இண்டைக்குப் பொங்கலெல்லே... புக்க... சாப்பிட வேணும் . நீ அதுக்கு முதல்... ஒருக்கா அந்த விறகுகளை அள்ளி பின்னுக்குப் போட்டிட்டுவா ''

சட்டென அவன் முகம் வாட்டமுற்றது. தலை கவிழ்ந்தது. நெஞ்சில் கட்டை அடைத்தது போல் உணர்வு ஏற்பட்டது; இருப்பினும் பல வந்தமாகக் கால்களை அசைத்தான்; நடந்தான். தள்ளாடியபடி விறகுகள் குவிக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றுன்.

சிறிதுநேரத்தில் 'புக்கைக்' குரிய வேலைவாங்கப்பட்டதும், அவன் போடியார் வீட்டின் பின்புறத்தில் நிலத்தில் இருத்தப்பட்டான்; இலை இடப்பட்டது.

''அங்க... அப்பலே மனிசிற்ற ஆளனுப்பி விட்டன்...'' இலையில் பொங்கலை போடியார் மனைவி இட்டபடி கேட்டாள்;

''மகன்... ஆஸ்.. பத்திரியில.. அம்மா... அங்க.. போய் வர.. பிந்திப்.. போச்சு...'' பொங்கலைக் குழைத்தபடி பதில் சொன்னன், அவள் வீட்டுள் போனன்.

தனியாக இருந்து இலையில் இட்டதை பளமள வென உண்டான். அவன் பசிக்கு அவை தூசு. அவள் மீண்டும் வந்து இலையக் கவனிப்பாளா என்று ஏங்கிக் கொண்டான். பார்வையால் அவளை எதிர்பார்த்தான். காணவில்லை. கையில் ஒட்டி இருந்த ஒரு சில படுக்கைகளையும் நக்கி, வந்த பசியைச் சமாளிக்கப் பார்த்தான். பலன் இல்லை; கையை நக்கியபடி எச்சில் இலையோடு வாசலையே பார்த்துக் கொண்டிருந்தான்;

சற்றைக்கெல்லாம் பக்கத்தில் ஏதோ சப்தம் கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான்; ஒருவன் ஒரு கலப்பையைக் காவிக் கொண்டு வரம்பில் நடந்துகொண்டிருந்தான். கலப்பையில் மாணிக்கத்தின் கண்கள் பதிந்தன.

அரிவாளும், சுத்தியலும் பிணைக்கப் பட்டு கலப்பை செய்யப்பட்டது போல் ஒரு தோற்றம், அதில் என்ன அர்த்தம்?

அதன் அர்த்தத்தைப்பற்றி மாணிக்கம் தெரிந்து கொண்டால் தான், நக்கிய கையோடு எச்சில் இலையையும் போடியார் வீட்டு வாசலையும், மாறி மாறிப் பார்க்கும் நிலையை மாற்றி அமைக்கமுடியும்.

- ★ -

## உழவும் - குறளும்

தொகுப்பு: ''குறளமுதன்''

| குறள் | பொருள் |
| --- | --- |
| சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனல்<br>உழந்தும் உழவே தலை | உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த்தொழிலின் பின் நிற்கின்றது. அதனல் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது. |
| உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்-<br>றெழுவரை எல்லாம் பொறுத்து. [ருது | உழவும் செய்யமுடியாமல் மற்றத் தொழிலைச் செய்கின்றவர் எல்லாரையும் தாங்குவதால், உழவு செய்கின்றவர் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர். |
| உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்-<br>[றெல்லாம்<br>தொழுதுண்டு பின் செல்பவர். | உழவு செய்து அதனல் கிடைத்ததை உண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர். மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுதுண்டு பின்செல்கின்றவரே. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org